# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ மார்கழி 1979 ★ இதழ் - 48


# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிறப்பு மலர்



இஃது எங்கள் நாற்பத்தெட்டாம் இதழ், அன்றி நான்காம் ஆண்டு மலர். இது நாவலர் சிறப்பு மலராகத் தக்க தருணத்தில் வெளிவருவதையுன்னி மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம்.

நாவலரைப் பற்றிச் சொல்ல நாமார்? அவர் மறைந்து நூறுண்டுகள் கழிந்துவிட்ட போதிலும் அவர் நினைவு இன்றுவரை எல்லோர் நெஞ்சிலும் வெகுவாகப் பதிந்துள்ளது. அவரைப் பற்றிச் சொல்ல எமக்கு யோக்கியதை இல்லாவிட்டாலும், அவர் மீது கொண்ட அன்பு, அபிமானம், ஆர்வம், ஆசை காரணமாகச் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. நாமாக ஏதையும் சொல்லுவதிலும் பார்க்க, அவரை நன்றாக அறிந்தவர்களும் அவரைப் பின் தொடர்ந்து உய்திபெற்றவர்களும் அவரைப் பற்றிச் சொன்னவைகளை நினைவு கூரும் வகையில் நாம் திரட்டிக் கூறுவதே அமைவும் சிறப்பும் உடையதாகும்.

நாவலரைப் போல நமக்காளில்லை என்றும், நாவலர் சைவப்பயிரை வளர்க்க வந்த சொல்லாறு என்றும், அவர் சிறந்த சிவநேயர் என்றும், திருவுடைத் தொண்டர் என்றும், வேதாகமோக்த சைவ சித்தாந்தப் பிரவர்த்தகர் என்றும், சிவாகம விற்பன்னர் என்றும், திருநெறித் தமிழாகிய தேவார திருவாசகங்களின் உண்மைப் பொருள் உணர்ந்தவர் என்றும், இலக்கண இலக்கியக் கடலை நிலைகண்டுணர்ந்தவர் என்றும், சிவனடியாரைச் சிவனென மதிக்கும் மெய்யடியார் என்றும், தமிழ் நாடெங்கும் நல்லறிவுச் சுடர்

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

★ நல்லவர் போற்றும் நல்லூர் நாவலன் ★

உ
சிவமயம்






### திருநாவுக்கரசுநாயனுர்

பொது

திருச்சிற்றம்பலம்

மேலு மறிந்திலன் நான்முகன் மேற்சென்று கிழிடந்து
மாலு மறிந்திலன் மாலுற்ற தேவழி பாடுசெய்யும்
பாலன் மிசைச்சென்று பாசம் விசிறி மறிந்த சிந்தைக்
காலன் அறிந்தான் அறிதற் கரியான் கழலடியே.

திருச்சிற்றம்பலம்

பிரமதேவன் அன்னப்பறவை உருவங்கொண்டு மேலே பறந்து சென்றும் சிவபிரானின் திருமுடியை அறிந்திலன். திருமால் பன்றி உருவங்கொண்டு கீழே அகழ்ந்து சென்றும் சிவபிரானின் திருவடிகளைக் கண்டிலன். ஆனுல் அன்புகொண்டு வழிபாடுசெய்த சிறுவனுன மார்க்கண்டேயருக்குப் பாசக்கயிறுவீசிய மடங்கிய சிந்தையுடையவனுன எமன் உதைவாங்கியதால் எவருமறிய முடியாதவரின் திருவடியை அறிந்து உயர்ந்தான்.




### பகைமாட்சி

பகையினது சிறப்பு

வழி நோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்
பண்பிலன் பற்ருர்க்கு இனிது. (கான்

காரியங்களைச் செய்யும் வழிகளை ஆராயாதவனும், பொருத்தமானவற்றைச் செய்யாதவனும், தன்மேல் வரக் கூடிய பழியைக் கருதாதவனும், நல்ல குணம் இல்லாதவனும் இருப்பவன் பகைவரால் எளிதாய் எதிர்க்கப்படுவதற்கு உரியவனுவான்.

### Dealing with Enemies

He who neither knows the right way given in books on virtue, nor does the right thing and who cannot anticipate the disgrace to come is a pleasing object to his enemies.

## டிசெம்பர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | சனி | — | பிரதோஷ விரதம் |
| 2 | ஞாயிறு | — | திருக்கார்த்திகை விரதம் குமாராலய தீபம் |
| 3 | திங்கள் | — | பூரணை விரதம். சர்வாலய தீபம். |
| 4 | செவ்வாய் | — | விநாயக விரதாரம்பம் |
| 10 | திங்கள் | — | நாவலர் குருபூசை |
| 15 | சனி | — | ஏகாதசி விரதம் |
| 16 | ஞாயிறு | — | பிரதோஷ விரதம் |
| 19 | புதன் | — | அமாவாசை விரதம் |
| 24 | திங்கள் | — | திருவெம்பாவை விரதம் |
| 25 | செவ்வாய் | — | நத்தார் பண்டிகை |
| 29 | சனி | — | சுவர்க்கவாயில் ஏகாதசி |
| 30 | ஞாயிறு | — | பிரதோஷவிரதம், கார்த்திகை |

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

### ஆறுமுகநாவலர்........

கொளுத்தி மெய்யறிவை ஊட்டிய சைவாசிரியர் என்றும். சைவப் பிரசங்கமென்னும் விடாமழையைப் பொழிந்த திருவாயை உடையவர் என்றும் பெரியார் பலர் போற்றினர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சாதாரண மனிதனுகப் பிறந்து வளர்ந்து சேவை செய்த ஒருவர். அவர் பள்ளி ஆசிரியர், பதிப்பாசிரியர், சைவப் பிரசாரகர், நூலாசிரியர், உரையாசிரியர், பள்ளிக்கூடத் தாபகர், தேசத் தொண்டர், தர்மசீலர், பிறரைப் பாதுகாத்தவர். இவற்ருல் அவர் அதிமனிதரானுர்.

நாவலர் அவர்களின் படிப்பாழம், ஒழுக்கசீலம், சேவை தலன், பரந்த மனப்பான்மை முதலிய பண்புகளைத் தொகுத்துக் கூறிய புலவர்கள் பலர். அவர் நல்லைத் தலத்திலமர் சிந்தாமணி, சம்ஸ்கிருத பாஷாவியாகரண சித்தாந்த தர்க்கவேதாந்த நிலயம், மதுரைச்சங்கம், மூன்றும் ஒன்ருய்த் தலைப்பட்ட பெரிய சங்கம், சைவாகமப் பொக்கிஷம், நன் மாணவகர் நெஞ்சகக் கோயிலில் வளர்ந்திடும் சேமவைப்பு, பசிப்பிணிக்கு அறுசுவையுணவு தினம் வழங்கிடும் காமதேனு, மதுரப் பிரசங்க அமிர்தத்தால் உலகத்தை வாழ்வித்த சற்பாத்திரம், கல்லூரி ஊர்தோறும் அமைத்துச் சிருர்க்கு இனிய கல்வியமுது ஊட்டும் அன்னை.

### ஈரப்பலா

இம்முறை வழக்கம்போல மில்க்வைற் தொழிலகத்தில் ஈரப்பலாக் கன்றுகள் வழங்கப்பெற்றன. இற்றைக்கு நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கிய கன்றுகள் மரமாகி நன்ருகக் காய்க்கின்றன என்று அன்பர்கள் எழுதும்போது எமது நெஞ்சம் பூரிக்கிறது.

முற்றொடர்:

# கண்டதும் கேட்டதும்

101. தானே செய்யக்கூடிய வேலையைப் பிறரைக்கொண்டு செய்வித்தலாகாது.

102. அறிவாளிகள் ஏழைகளிலும் பார்க்க எளியவாழ்வு வாழ்வார்கள்.

103. குருடர் மீது கொள்ளும் அனுதாபத்தைப்போல் அறிவில்லாதவரிடமும் நாம் இரக்கங்காட்ட வேண்டும்.

104. எமக்கு ஒருநாவும் இரண்டு செவிகளும் இருப்பதன் காரணம் பேச்சைக் குறைத்துக் கேட்பதைக் கூட்டுவதற்காகவேயாம்.

105. வைரம் பாய்ந்த மரத்தையும் துளைக்கும் வண்டு மெல்லிய தாமரை மலரிதழ்களைத் துளைக்கமாட்டாது அடைபட்டுக்கிடக்கும்.

106. அகந்தை என்பது அடக்கமுடியாத ஒரு யானை. அதனை அடக்கக்கூடிய சிங்கம் நல்ல குருநாதன் ஒருவரே.

107. மூளையிலுள்ள அறிவிலும் பார்க்க இதயத்திலுள்ள கருணையே சிறந்தது.

108. பெரும் பொறுப்புக்களை ஏற்குமுன் தன்நம்பிக்கை உள்ளத்தில் இருத்தல் வேண்டும்.

109. பேசுவதில் பேராற்றல் பெற்றவன் மனிதன், ஆனால் அவனுடைய பேச்சில் பெரும்பாகம் உபயோகம் அற்றது, முறையற்றது. மிருகங்களின் அறிவு குறைவானதாயினும் சத்தியமானது.

110. சிறு கேள்விக்கு நீண்ட விடையளிப்பவன் எதையோ மறைக்கிறான்.

111. சிந்தனையே சக்தியின் உற்பத்தி. உடலப்பியாசம் நிரந்தர இளமையின் இரகசியம். படிப்பு விவேகத்தின் மூலம். அன்பு செய்தல் கடவுள் அளித்த சலுகை. நட்புக்கோடல் ஆனந்தத்துக்கு வழி. சிரித்து மகிழ்தல் ஆத்மாவின் இசை.

112. கொடுத்து மகிழ்தல் தன்னலமற்ற செயலுக்கு அவகாசம். உழைக்கும் காலமே வெற்றியின் விலை.

113. பயபக்தியில்லாத அறிவு ஆன்ம அபிவிருத்திக்காக இருக்காது.

114. நம்மிடம் மறைந்துகிடக்கும் சக்தியைத் தூண்டவே துன்பம் வருகிறது.

115. உத்தமமான மனைவியைப் பெறுவதற்கு வழி உத்தமமான கணவனாய் இருத்தல் தான். — தொடரும்

## மயிலிட்டியில் மரம் நாட்டும் விழா

மயிலிட்டி வைத்தியசாலை வளவில் நூற்றுக்கணக்கான சவுக்கு, சஞ்சீவி மரங்களை நாட்டுவதற்குப் பெரிய டாக்டரும் ஊழியர்களும், அவ்வூரைச் சேர்ந்த செல்வராசா அவர்களும் உதவியாயிருந்தார்கள். நல்ல சுவாத்தியமுள்ள இடத்தில் இந்த மரங்கள் வளர்ந்து நறு நிழலைத்தரும் என்பது துணிபு. தேசீய இளைஞர்களின் ஊரணி உறுப்பினரான பெண்கள் பலர் இவ்விழாவில் பெரும்பங்கு பற்றினார்கள். அவர்களுக்கு எம் நன்றி.

## சுவாமி சர்வாதீதானந்தஜீ

சுவாமி விபுலானந்தர் அவர்களை நினைக்கும்போது அன்னாரின் அடிச்சுவட்டில் வந்த இன்னொரு சுவாமியையும் இன்று நினைவுகொள்ள வேண்டியவராகிறோம். விபுலானந்த அடிகளாரின் உத்தம சீடர்களில் ஒருவரான சர்வாதீதானந்த அடிகள் இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த இலங்கைவாழ் முன்னோடிகளுள் ஒருவர்.

கொழும்பு, கல்லடி உப்போடை, கதிர்காமம் ஆகிய இடங்களிலமைந்த மடங்களில் இவரின் சேவை அளவிட முடியாததொன்றாயிருந்தது. கிழக்கு மாகாணத்தில் தம்பலகாமத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் உருவான சிறுவர் இல்லத்திற் சேர்ந்து படித்த பழைய மாணவர்களுள் ஒருவர்.

சேவை செய்வதில் இணையில்லாத இவரின் திருநாமம் கதிர்காம மடத்திலேதான் அதிகமாகப் பிரபலிக்கமானது. எத்தனை ஆயிரம் யாத்திரிகர்கள் வந்தாலும் மனங்கோணாமல் மூன்று வேளைகளிலும் பூரண உணவளித்த பொற்கை அவர்தம் திருக்கை. கதிர்காம மடத்தில் அன்னக்கொடி பறக்கிறது என்று அயலூர்களில் குடியேறியிருந்த வறிய மக்கள் அறிந்ததும் பெட்டி கடகங்களுடன் சென்று வரிசையாயமர்ந்து வயிற்றுப் பெட்டியையும், ஓலைப் பெட்டியையும் நிரப்பி மீண்டுபோவது வழக்கம்.

மடத்தில் தங்கும் அத்தனைபேருடைய உடைமைகள் பாதுகாப்பாயிருத்தற்கும் சுவாமிகளின் கடைக்கண் காவல் புரிவதில் தவறுவதில்லை. மட்டக்களப்புப் புயலின்போது கல்லடி உப்போடை ஜீவனானந்த சுவாமிகளுக்கு உறுதுணையாயிருந்து நூற்றுக்கணக்கான குஞ்சுகளைக் காத்துநின்ற இருவருள் சர்வாதித்தானந்தரும் ஒருவர். கணீரென ஒலிக்கும் வெங்கலக் குரலிலும் ஒரு கனிவும் கருணையும் களிநடம்புரியத் தவறுவதில்லை. ஆயிரக்கணக்கானவருக்கு உண்டி கொடுத்த சுவாமியவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

சுவாமி அவர்கள் சமாதி எய்திய பதின்மூன்றாம் நாள் விசேட பூசையும், அன்னதானமும் கல்லடி உப்போடையில் 9-11-79 வெள்ளிக்கிழமை நடைபெற்றது என்றும் மூவாயிரத்துக்கும் அதிகமானோருக்கு அன்னதானம் செய்யப்பெற்றது என்றும் சுவாமி ஜீவனானந்தா அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

## தொண்டமானாறு வெளிக்களத்தில் மில்க்வைற் மரம் நாட்டும் விழா

அன்று 18-11-79 ஞாயிற்றுக்கிழமை மாலை தலைவர் கே. எஸ். குகதாசன் தலைமையில் நடைபெற்ற விழாவில் மெல்லிசை வல்லுநர் ராபேஷ் வைகுந்தநாதன் இசை விருந்தளித்தார்கள். பனைவளம் பெருக்கும் பண்பாளர் சு. பரநிருபசிங்கம் B. Sc. அவர்கள் மரங்களின் பயனை விஞ்ஞானரீதியாகவிளக்கிப் பேசினார். சமுத்திர விஞ்ஞானம் முதலிய படக்காட்சிகளை மில்க்வைற் தொழில் நிபுணர் இ. தவகோபால் இயக்கிக் காண்பித்தார். குழந்தைகள் இளைஞர் யுவதிகள் பெரியவர் பலர் பயன்பெற்றனர் என்றுதான் கூறவேண்டும்.

★ வெண்ணீறும் கண்டிகையும் விடாது பூண்டோன் ★

## புவனேந்திரனுக்குப் புகழ்மாலை

யாழ்ப்பாணச் சாரணர்குழுப் பொதுச்செயலாளர் புவனேந்திரன் அவர்களுக்கு அன்று 25-11-79 ஞாயிற்றுக்கிழமை வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் பெரிய புகழ்மாலை கிடைத்தது. மகாவித்தியாலய அதிபர் இராமசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்ற மகத்தான மரம் நாட்டுவிழாவில் வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் மாணிக்கவாசகர் புவனேந்திரனுடைய முயற்சியை வெகுவாகப் புகழ்ந்தார்.

வடபிரதேசச் சாரணர்கள் தங்கள் கல்லூரிக் கொடிகளின்கீழ் அணிவகுத்து வந்து மாநாட்டைச் சிறப்பித்து மரம்நாட்டும் பணியை மங்கலகரமாக நடாத்திவைத்தார்கள். கல்லூரி அதிபர்கள் பலர் விழாவிற் கலந்து உரையாற்றினர்கள். லயன்ஸ் கழகம், ரோட்டரிக் கழகம் முதலிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் வரிசையில் மரம் நாட்டும் இயக்கத்தின் முன்னோடி என்று புகழ்பெற்ற மில்க்வைற் தொழிலதிபரும் அமர்ந்து சிறப்புரைவழங்கி ஏராளமான கன்றுகளை வழங்கினர். விவசாய விரிவாக்கப் பகுதித் தலைவர் சிவமுத்துலிங்கம் அவர்களும் சிறப்புரையாற்றிச் சிறப்பித்தார்கள்.

வசாவிளான் மகாவித்தியாலய வளவைக் கச்சேரிப் பழைய பூங்காபோல வளமாக்கிச் சாரணரின் பாசறை வாழ்வுக்குப் பயன்படுத்த வேண்டும் என்றார். சாரண ஆணையாளர் கந்தமூர்த்தி அவர்கள் சாரண இயக்கம் பரவும்வகை செய்வதற்குத்தாம் பாடுபடுவதாக உறுதி கூறினர். மில்க்வைற் ஆய்வுகூடத்தைச்சேர்ந்த இ. தவகோபால் தாமும் சாரணராதலில் இப்பணியில் இரட்டிப்புப் பணிபுரிந்தமை பாராட்டற்பாலது. மரம் நடுகையின் சிறப்புப்பற்றி நெல்லையப்பர் பாடிய பழைய பாடல்களை ராமேஷ் வைகுந்தநாதன் மெல்லிசையிற்பாடி எல்லோரையும் நெகிழச் செய்தார். ★

## உழைக்குங் கரங்களின் மகத்தான உபகரிப்பு

மில்க்வைற் தொழிலகத்தின் உழைக்குங் கரங்கள்— தொழிலாளத் தோழர்கள் பெருந்தொகையான வேம்பு, கடம்பு, கறிவேப்பிலை இன்னும் பல கன்றுகளை உபகரித்து எம்மைப் பணிசெய்ய வெகுவாக ஊக்கியுள்ளார்கள். நவரத்தினராசா, கைலாயநாதன், சிவஞானசுந்தரம், சிவராசா, தருமலிங்கம் ஆகியோர் கூடுதலான கன்றுகளைத் தந்துள்ளார்கள் என்பதைச் சொல்லத்தான் வேண்டும்.

## வீட்டுத் தோட்டம்

சிறிய வளவுகளிலும் கீரை, கத்தரி, பயற்றங்காய் இவற்றை விளைவு செய்து பிள்ளைகளும் பிறரும் விவசாயத்தில் ஈடுபடுதல் வேண்டும் என்று கருதிய மில்க்வைற் தொழிலதிபர் ஏராளமான கீரை விதைகளையும், கத்தரி விதைகளையும், பயற்றங்காய் விதைகளையும் தாராளமாக வழங்கியுள்ளார். இவற்றின் நெற்றுக்களைத் தயாரித்து நீங்கள் மேலும் பலருக்குக் கொடுத்துதவுங்கள். கொண்டும் கொடுத்தும் வாழ்தல் எங்கள் பண்பாடுதானே.

# மாநகர் பகுதி

## சைவ மகளிர் மன்றம்

யாழ்ப்பாணம் சைவ மகளிர் மன்றத்தார் 17-11-79 சனிக்கிழமை நல்லையாதீன மண்டபத்தில் எடுத்த சர்வதேச சிறுவர் ஆண்டையொட்டிய பரிசளிப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது. சைவம் வளர்த்தலில் ஈடுபட்ட இவர்கள் குடாநாட்டிலுள்ள மாணவ மாணவியருக்கு விலையுயர்ந்த பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கி ஊக்குவித்தார்கள்.

## தேக்கு

அரசாங்கப் பண்ணைகளிலும், மில்க்வைற் தொழிலகத்திலும் கிடைக்கும் தேக்கங் கன்றுகளை எப்படி நடுதல் வேண்டும் என்று விளக்கும் பிரசுரம் ஒன்றை மில்க்வைற் தொழிலதிபர் வெளியிட்டபோது வடமாநிலக் கல்வி அதிகாரி திரு. மாணிக்கவாசகர் அதன் முதற் பிரதியைப் பெற்றுச் சிறப்பித்தார்கள்.

## யாழ்ப்பாணத்தில் பருவமழை

யாழ்ப்பாணத்துக்கு ஒரே ஒரு நீர் வசதியான வடகிழக்குப் பருவமழை இம்முறை நல்லமுறையாகப் பெய்து குடாநாடெங்கும் பசுமையாக இருக்கிறது. குளங்களைக் காலந்தோறும் தவறாமல் தோண்டினவர்கள் மழைநீர் தேங்கிநிற்கும் அற்புதத்தைக்கண்டு மகிழ்ச்சியடைகிறார்கள். இங்ஙனம் செய்வதால் கிணற்று நீரில் உவர்த்தன்மை நீங்குவதோடு சுற்றுடல் பசுமையாக இருக்கிறது. மழை நீரை வீணாகக் கடலுட் பாயவிடுதல் பாதகமான செயலாகும் என மக்கள் பையப்பைய உணருகிறார்கள். ஏரிகள் நிறைந்துள்ள இடங்களில் நாயன்மார் இறைவனைக்கண்டு பாடியுள்ளார்கள் என்பதை நம்மவர் நெஞ்சில் கொள்ளுதல் நன்றாகும்.


## மில்க்வைற் செய்தி

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2,
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2,
சலவைப் பவுடர் மேலுறை 2

மில்க்வைற் த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.



# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிறப்பு மலர்

நாவலர் அவர்கள் மறைந்து நூருண்டுகள் கழிந்து விட்டன. அவர் 1879 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஐந்தாம் நாளுக்குச் சரியான பிரமாதி வருஷம் கார்த்திகை மாதம் இருபத்தொராம் நாள் மக நட்சத்திரவேளையில் இறைவனடி சேர்ந்தவர். அவர் மறைந்தபோது அவருக்கு ஐம்பத்தாறு வயது நிரம்பிப் பதினொரு மாதங்களாயிருந்தன. அந்நாளைக் குறித்து அக்காலப் புலவர் ஒருவர் பாடியுள்ளார்.

> கார்த்திகைமா தத்துமகம் காசினிக்குச் சைவநிலை
> சேர்த்திப் பரசமயம் சேதித்துச் — சீர்த்திமிக
> மேவு தமிழ் தந்தகந்த வேள்நல்லூர் ஆறுமுக
> நாவலர்வீ டுற்றதிரு நாள்.

---

## நாவலர் அவர்களின் முன்னோர்

### ஆண்வழி

மூத்ததம்பி முதலியார்
|
சோதிநாதர்
|
இலங்கைகாவலர்
|
பரமானந்தர்
|
கந்தப்பிள்ளை
(கந்தர், இலங்கைகாவலர் எனவும் வழங்கியவர்.)
|
ஆறுமுகநாவலர்

### நாவலர் அவர்களுக்குப் புராணேதிகாசங்களில் சுவையூட்டிய ஞானபரம்பரை

வட்டுக்கோட்டை சுவாமிநாதர்
|
இருபாலை சேனாதிராய முதலியார்
|
நல்லூர் ஆறுமுகநாவலர்

---

## நாவலர் அவர்கள் கண்டனங்கள் வெளியிட்ட இலங்கைநேசன் பத்திரிகையின் தோற்றம்

(உதயதாரகை 4-1-1877 விளம்பரம்)

### இலங்கைநேசன்

இலங்கைநேசன் என்னும் இப்பெயரினால் ஒரு வாசிக் பத்திரத்தை தமிழில் முத்திரித்து 1877ஆம் வருடம் தை பதினேழாம் நாள் புதன்கிழமை மோனையாய் மாதமிருமுறை பிரசுரிக்கும்படி முயன்றிருக்கின்றனம்.

இப்பத்திரத்திலே இலங்கை, சென்னை, வங்கம், பம்பை முதலான அதிபத்தியங்களிலே நிகழ்ந்திடுஞ் சமாசாரங்களும் நூதன சங்கதிகளும், ராசரிகவிஷயங்களும், கல்வி, வர்த்தகம், காருகம், விவசாயம், கிருஷி முதலான கிருத்திய சம்பவங்களும் நிமரத நிமபோத துலரிகளின் விநோதாதிசய வர்த்தமானங்களும் பிரசுரிக்கப்படும்.

இதன் கிரயம் தபால் செலவு நீக்கி வருடாந்தம் ரூபாய் இரண்டு. பத்திரம் இலங்காபிமானி அளவாயிருக்கும். சைதன்ய விருத்தியைப் பரிபாலிப்பதற்குச் செழும்பயன் விளைகின்ற செம்பொருளைத்தரும் வாசிக பத்திரமும் ஓர் உத்தம உபகரணமாம்.

இப்பத்திரத்துக்குக் கையொப்பகாரராய் வரவிரும்புவோர் தங்கள் நாமதேயங்களையும் தாம் வசிக்கும் இடங்களையும் பிரதிகளின் தொகையையும் தெள்ளிதாய் எழுதி இதன்கீழ்க் கையொப்பம் வைத்திருப்பவருக்கு அனுப்பி வைக்கவும்.

ஆரியகுளம், இங்ஙனம்
யாழ்ப்பாணம். 1-1-1877. H. M. சின்னத்தம்பி

---

## சைவப்பிரசாரகராகிய நாவலர் அவர்கள் எழுதிய புவனசாத்திரம் என்னும் பூமிசாத்திரம்பற்றி முல்லைத்தீவு மாணவன் என்னும் புனைபெயரில் ஒருவர் உதயதாரகையில் செய்த கிண்டல்

ஐயாவே!

ஆறுமுகநாவலரவர்கள் ஸ்தாபித்திருக்கும் வித்தியாசாலையில் வழங்கும் புவனசாத்திரத்தில் இந்துக்கள் போற்றிப் புகழ்கின்ற சத்த சமுத்திரங்களையும் மகாமேரு பர்வதத்தையும்பற்றி யாது கூறப்பட்டிருக்கிறது என்று நீவிராவது, பிறராவது நமக்குப் புலப்படுத்துவதற்குச் சித்தங்கொள்ள வேண்டுகின்றோம்.

முல்லைத்தீவு. — ஓர் மாணவன்

---

## நாவலர் அவர்கள் பாடசாலை முகாமையாளருள் ஒருவர். அவர்காலத்தில் 1871ஆம் ஆண்டில் உதவிநன்கொடை பெற்ற முகாமையாளரும் அவர்கள்பெற்ற பவுண் தொகையும்

| | | | |
|---|---|---|---|
| டௌபிகன் | 196 | ஆணல்ட் | 155 |
| ஸ்கொட் | 200 | செனநாயகம் | 95 |

| | | | |
|---|---|---|---|
| அல்கொக் | 99 | சலனி | 252 |
| கிறிஸ்தியன் | 14 | பர்னாந்து | 130 |
| அடம்ஸ் | 17 | சிமித் | 590 |
| நாவலர் | 68 | ரிக் | 532 |
| மாட்டின் | 15 | குட் | 504 |

### கல்வித் திணைக்களத்துக்கு ஒதுக்கீடு

அரசாங்கம் 1872ஆம் ஆண்டில் ஒதுக்கிய 80,000 ரூபாவில் யாழ்ப்பாணம் 36,000 ரூபாவைப் பெற்றது என்று அறியக்கிடக்கிறது.

### நாவலர் மறைந்த காலத்து இலங்கைக் குடிசனம் கணிப்பு 1871

| | |
|---|---|
| சிங்களவர் | 16,70000 |
| தமிழர் | 5,34000 |
| முஸ்லிம் | 1,64000 |
| பிறர் | 38000 |

**தமிழ் மக்கள்**

| | |
|---|---|
| வடமாகாணம் | 2,71690 |
| கீழ்மாகாணம் | 69249 |
| தோட்டப்பகுதி | 1,15090 |

### நாவலர் மறைவைக் குறித்து "உதயதாரகை" 18-12-1879இல் வெளியிட்ட செய்தி

மஹா ஸ்ரீ ஸ்ரீ க. ஆறுமுகநாவலர் இலங்கை யாழ்ப்பாணம் வடகரை எங்கும் ஓர் கல்விமான் எனப் பெரும் புகழ்படைத்த இவரும் பிறக்கிட்ட ஆரூந் திகதி தேகவியோகமாயினர். இரண்டொரு வருடங்களாகவோ கூடவோ யாமறியோம் இவருக்கு நொய்வு உபத்திரவஞ் சொற்பமாயிருந்தும் கடைசியில் இக்காலச் சுகசீவிகளுக்கு நேரிடும் இரட்டை ரோகங்களிலொன்றும் நீரழிவே இவர்க்குக்கண்டு மின்னாமல் முழங்காமற் சட்டென இடிவிழுந்தாலொத்து நாலைந்து தினங்களுள் அவருயிரை எடுத்தது. அடுத்தநாட் சாயந்தரம் அவர் பிரேத தகனம் நிறைவேறிற்று.

ஆதியில் அநேக வருடங்களாக இவர் எம்பத்திரிகை மேல் அபிமானங் கொண்டிருந்தவர். நல்லூர் கந்தர், குமாரர், அறுமுகவர் என்னுங் கையொப்பங்களுடன் எம் பத்திரிகையிற்றோன்றிய கடிதங்கள் இவரால் வரையப்பட்டனவே. இவரது தேகவியோகத்தால் யாழ்ப்பாணம் ஓர் தகுந்த கல்விமானையிழந்ததென்றதை மறுக்கத் துணிபவரார். ஆயின் மரணம் யாரைத்தான்விட்டது.

### நாவலர் ஞானபரம்பரையில் ஓர் ஒளிவிளக்கு வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை

(24-4-1836 — 18-12-1897)

**மாணவர்கள்**

மட்டுவில் வேற்பிள்ளை, மாரிமுத்து உபாத்தியாயர், சிவசங்கர ஐயர், ச. பொன்னம்பலபிள்ளை, கந்தமடம் சுவாமிநாத பண்டிதர், வை. சி. சிவகுருநாதபிள்ளை, கொக்குவில் சபாரத்தின முதலியார், கணேசபண்டிதர், புலோலி குமாரசுவாமிப்புலவர், ம. தம்பியப்பா, வைத்திலிங்கம்பிள்ளை. சுப்பிரமணிய ஓதுவார், குமாரசுவாமித் தம்பிரான், பின்னத்தூர் நாராயணசுவாமி ஐயர், அச்சுவேலி வேன்மயில்வாகனச் செட்டியார், சாவகச்சேரி பொன்னம்பலபிள்ளை, வடகோப்பாய் சபாபதி நாவலர், வண்ணார்பண்ணை பொன்னுத்துரை ஐயர், மகிபாலன் பட்டிவன்றொண்டன் செட்டியார், தர்க்ககோடரி திருஞானசம்பந்தபிள்ளை, பெருமாள்கோயிலடி நெ. வை. செல்லையா, புன்னாலைக்கட்டுவன் கணேசையர், மாதகல் அருணாசல ஐயர், திருவாவடுதுறை மகாலிங்கம்பிள்ளை, உரத்தூர் வைத்திலிங்கம்பிள்ளை, தாவடி சோமாஸ்கந்த பண்டிதர், காரைக்குடி சொக்கலிங்கஞ் செட்டியார். திருவாவடுதுறை பொன்னோதுவார், திருவாவடுதுறை சுப்பிரமணிய ஓதுவார்.

நடமாடும் பல்கலைக்கழகமாய் இலக்கிய இரசனையில் இணையில்லாதவராயிருந்த வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையின் உரைநயங்களில் நாவலர் அவர்களே பெரிதும் ஈடுபட்டுப் பூரிப்பது வழக்கம் என்பர். ஆறுமுகநாவலர் அவர்களை அடுத்தே தாம் தம் கல்வியைப் பெற்றுக் கொண்டதாக வித்துவசிரோமணி பலவிடங்களிற் பாடியுள்ளார்.

### நாவலர் பதித்த பாரதத்தின் மேன்மை

(திருமலை ஜெம்புலிங்கம்பிள்ளை செந்தமிழ்ச்செல்வி பதினாறும் சிலம்பின் இரண்டாம் பரலில் எழுதியமை.)

இராச கோபாலபிள்ளை என்பவர் மகா சிவத் துவேசமுடையவர். கோமளேஸ்வரன் பேட்டை என்பதில் ஈஸ்வரசப்தம் இருப்பதால் அதனைக் கோமளபுரம் என்று மாற்றியவர். இவர் அச்சிட்ட வில்லி புத்தூரர் பாரதத்தில் சிவபரமான அநேக பாடல்களை நீக்கிவிட்டவர். இதனாலன்றோ மகாபாரதத்தை நாவலரவர்கள் அச்சிடலானார்.

### நாவலர் ஞானபரம்பரையில் வந்த வன்றொண்டஞ் செட்டியார்

பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரின் முன்னோரான வன்றொண்டஞ் செட்டியாரைப்பற்றி மகாமகோபாத்தியாயர் தமது நல்லுரைக் கோவையில் இருபத்திரண்டு பக்கங்களில் அழகாகவும் அருமையாகவும் எழுதியுள்ளார்கள். செட்டிமார்கள் என்னும் தனவணிகர்கள் தமிழும் சைவமும் வளர்த்த தனிமுறை மற்றவராற் செய்யமுடியாதவை.

அவர்கள் வேதபாடசாலை, ஆகமபாடசாலை, தேவாரபாடசாலை, தமிழ்க்கலாசாலை, அன்னசத்திரங்கள், யாத்திரை விடுதிகள், சைவசமயாசாரியர் குருபூசை மடங்கள், அறுபத்துமூவர் மடங்கள், பசுமடம், கற்பூரமடம், சாம்பிராணிமடம், நந்தவனம் முதலிய பல தரும ஸ்தாபனங்களை நடத்தி வருகிறார்கள். அவர்களுடைய சிவபக்தியும் தருமசிந்தனையும் கல்லின் மேல் எழுத்துப்போல் விளங்குகின்றன.

வன்றொண்டரின் இயற்பெயர் நாராயண செட்டியார். அவர் அண்ணாமலை செட்டியாரின் அருந்தவப் புதல்வர். பெருஞ்செல்வர். அவர்கள் திருப்பெருந்துறையில் அன்னசத்திரங் கட்டியவர்கள். வன்றொண்டர் படிப்பில் ஆர்வமுள்ளவர். பெரியார் பலரிடம் படித்தவர். திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களிடம் திருவாவடுதுறையில் பாடங்கேட்டவருள் செட்டியாரும் ஒருவர். மற்றவர்களுள் இராசாமிப்பிள்ளை என்பாரும், நமசிவாயத் தம்பிரான் என்பாரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

★ அமிழ்தினும் இனிய சொல்லான் ஆறுமுகநாவலன் ★

### வன்றொண்டர் நாவலரை அடுத்தமை

வன்றொண்டர் எத்தனையோ வித்துவான்மாரிடம் பாடங் கேட்டவர். அவர் ஒரு சமயம் ஆறுமுகநாவலர் அவர்களின் பேச்சைக் கேட்கக் கிடைத்தது. அவருடன் அவர்தம் மாணவ நண்பர்களாய இராமசாமிப்பிள்ளை என்பாரும் நமசிவாயத் தம்பிரானும் இருந்தார்கள். நாவலரின் பேச்சைக்கேட்ட நாள் முதல் வேறு பேரிடம் வேலையில்லை என்று மூவரும் நாவலரைப் பின்றொடர்ந்து படித்தவர்கள். அவர்களுள் வன்றொண்டரின் முயற்சியை மகாமகோபாத்தியாய ஐயா அவர்கள் அருளிச்செய்த வசனத்திலேயே அறியலாம்.

''யாழ்ப்பாணம் ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களிடம் அவருக்கு மிக்க அன்புண்டு. நாவலரவர்கள் சென்னையிலிருந்த காலத்திலும் சிதம்பரத்தில் இருந்த காலத்திலும் சென்று சைவ நூல்களையும் சித்தாந்த சாஸ்திரங்களையும் அவர்பாற் கேட்டனர். அவர்கள் யாழ்ப்பாணத்துக்குச் சென்ற பின்பு அங்கும் சென்று சிலகாலம் இருந்து அவர்களிடம் பாடங்கேட்டதுண்டு''.

செட்டியாருக்கு வன்றொண்டர் என்று பெயர் வழங்கக் காரணமாயிருந்தவை அவருடைய சைவ ஒழுக்கசீலங்களேயாம். அவருடைய விரத அநுட்டான நியமங்கள் மிகவும் கண்டிப்பானவை. திருமுருகாற்றுப்படையைத் தினமும் ஆறுமுறை ஓதுவார். பஞ்சாட்சரத்தை 1008 முறை ஜபிப்பார். அவர் பிரயாணஞ் செய்யும் போதும் இவற்றைச் செய்யத் தவறுவதில்லை. எனவே நண்பர்கள் அவரை வன்றொண்டர் என அழைத்தனர் என்பர்.

வன்றொண்டர் வயது முதிர்ந்த பின்னரும் அதிலும் கண்பார்வை அற்றபின்னர் தமக்குப் பணியாளரையும், பேச்சுத் துணையாளரையும் இட்டுக்கொண்டு நாவலரிடமும் அவர் மருகர் பொன்னம்பலம்பிள்ளையிடமும் படித்தறிய வந்தார்.

### நாவலர் ஞானபரம்பரையில் தலைசிறந்த சீடரொருவர் காரைக்குடி சொக்கலிங்கஐயா என்னும் செட்டியார்

''சுத்தாத்துவித சைவ சித்தாந்தச் செந்நெறிச் செல்வராய், அந்நெறிக்கண் உறைத்து நின்றும், அந்நெறியே முத்திநெறி எனப் பிறர்க்குப் போதித்தும், அந்நெறி மேன்மேலும் ஓங்கி வளர்ந்து, இவ்வுலகம் உய்திபெற வேண்டும் என்னும் நோக்கத்துடனே, அது விருத்தியாவதற்கு இன்றியமையாத மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை அமைத்தும், மற்றுஞ் சிவபுண்ணியங்களைச் செவ்விது செய்தும், செய்வித்தும் உபகரித்த உத்தம சிவபுண்ணிய சீலராவர்.

சிவாகம விதிப்படி பெருமைமிக்க சிவாசாரியரிடத்தே சமய விசேட நிருவாண தீக்கைகள் பெற்று, சிவபூசை எழுந்தருளச்செய்து, சிவாலய சேவை இடையறாது செய்தும், தம்மை வந்தடைந்த நன் மாணவர்களுக்கு அவரவர் மதிநுட்பம் நோக்கி கருவி நூல், அறிவு நூல்களை மனம் தெளிவுறப் போதித்தும், பெரிய அவைக்களங்களில் அரியேறு போன்று வீற்றிருந்து சைவ வீரப்பொலிவுடன் பிரசங்கமாரி பொழிந்து புறச்சமயங்களைக் கண்டித்துச் சிவமே பரம்பொருளென நாட்டியும், என்றும் மாறுத சிவவேடப் பொலிவுடன் சித்தாந்த ஞானச்சிவானுபூதிச் செல்வராய் நிலவியிருந்து'' பெருந்தொண்டாற்றியவர்.

''ஏராரும் ஆறுமுக நாவலர் கோனிணையின் மகிழ்
மீக்கூரப் பெருகுந் தொண்டன்
அன்னவன்றன் மருமகன் பொன்னம்பலப்பேர்
அறிஞனறந் திகழ்கூடறனை நீங்காது'' —

என்று தேவகோட்டை சைவப் பிரகாசசாலைத் தலைமையாசிரியர் இவரைப் போற்றியுள்ளார்.

### செட்டியார் நாவலரை அடுத்தமை

''செட்டியார் ஆறுமுகநாவலரைக் கண்டு வணங்க யாழ்ப்பாணம் போயிருந்த காலத்தில் அங்கே சுத்தாத்துவித சைவசித்தாந்த வியவஸ்தாபகராக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானையடுத்து அத்தியந்த பக்தி விசுவாசத்துடன் சிஷ்யராகவிருந்து, அவர்களிடத்தும், அவர்களுடைய மருகரும், முதல் மாணவருமாகிய வித்துவசிரோமணி ஸ்ரீமத் பொன்னம்பலபிள்ளை அவர்களிடத்தும் தமிழ் இலக்கண இலக்கிய புராண இதிகாச முதலிய வைகளை முறையாகப் பாடங்கேட்டுங் கொண்டார்கள்.

அங்ஙனம் கல்வி பயின்ற காலத்திலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களுடைய திருவடிப் பாதுகையைப் பத்திர புஷ்பங்களால் பூசித்து வணங்கி நாவலகுரு வணக்கம் என்றொரு பதிகமும் பாடி வணங்கியிருக்கிறார்கள். எப்பொழுதும் அவர்களுடைய மேன்மையையும் தீரத்தையும் அடிக்கடி புகழ்ந்து பேசி வந்தார்கள். தாம் இயற்றிய திருப்புத்தூர்த் தலபுராணத்தில் ஆறுமுக நாவலருக்கு வணக்கஞ் சொன்ன வகை உள்ளத்தை உருக்குந்தன்மையது.

ஆற்றுபணி கொண்டடியென் முடியிற் சூட்டு
மாறுமுக நாவலர்கோ னவன்றுட் கன்பே
போற்றுவழி வந்தவிமற் சரமெய்ச் சீலர்
புந்திமகிழ் வுறுவர் என்சொற் புன்மை நோக்கி—

இத்தகைய புகழ்பூத்த செட்டியார் ஐயா, ஆறுமுக நாவலரின் மாணவர்களான வன்றொண்டச் செட்டியாரிடத்தும் பொன்னம்பலபிள்ளையிடத்தும் பயின்றவர். செட்டியார் ஐயா மறைந்தபோது கும்பகோணம் பாரத மித்திரன் பத்திராதிபர் உள்ளமுருகிப் பாடிய பாடல்கள் ஈழநாட்டு நல்லூரையும் நாவலர் பெருமானையும் போற்றுகின்றன.

சிறந்த புகழ் யாழ்ப்பாணத் திருநாட்டு
நல்லூரிற் றேச மெங்கும்
அறந்திகழ வந்த வெங்கள் ஆறுமுக
நாவலனு ரருளைப் பெற்றே
மறந்தவிரக் கலைபயின்ற வன்றொண்டர்
மாணவனுய் மன்னுஞ் சைவத்
திறந்தெரிநற் கலைபயின்ற செல்வ வெங்குச்
சென்றனை நீ செப்பு வாயே.

### கம்பனுக்குப்பின் சம்பன்

ஏராளமான விருத்தப் பாக்களைப் பாடியவர் கவிச் சக்கரவர்த்தி கம்பர். கம்பருக்குப் பின் தமிழ்நாட்டில் ஏராளமான பாடல்களைப் பாடியவர் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள். ஆனுல்

★ தமிழினைப் புதுக்கவந்த தத்துவப் புதல்வன் ★

ஈழநாட்டில் ஆயிரக்கணக்கான பாடல்களைப் பலவகைப் பிரபந்தங்களிற் பாடித் தமிழ் நாட்டிலும் ஈழநாட்டிலும் பெயர் எடுத்தவர் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர். இவர் ஆறுமுகநாவலர் அவர்களுக்கு ஏழாண்டு இளையவர். சி. வை. தாமோதரம்பிள்ளைக்கு மூவாண்டு மூத்தவர். எடுத்தவுடனே எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் பாட்டுப்பாடும் திறமைபெற்றவர் சிவசம்புப் புலவர். அவர் ஆறுமுகநாவலருக்குப் பின்னமர்ந்து அவர்செய்யும் பிரசங்கத்தின் சாரத்தை உடனுக்குடன் சபையோர் மகிழுப் பாடி நெஞ்சிற் பதிப்பித்து வந்தவர்.

அறிவாற்றல்மிக்க புலமையாளர் பலர் வாழ்ந்த புலோலியில் ஒருநாள் நாவலர் பிரசங்கஞ் செய்தார். மழைக்காலமாயிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி யிருந்தார்கள். அன்று நாவலரும் அற்புதமாகப் பேசினர். அவர் பேச்சைக் கேட்ட மக்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். பிரசங்கமுடிவில் சிவசம்புப் புலவர் எழுந்து மடைதிறந்தாற்போலப் பாடல்கள் பாடினர். அங்கே பெய்த மழை - சிவனர் அருள் மழை — அடியார் ஆனந்தக்கண்ணீர் மழை — ஆறுமுகநாவலரின் பிரசங்க மழை — அடியார்கள் நாவலரின் தர்மப்பணிக்குக் கொடுத்த கொடைமழை இப்படியாக எத்தனை மழை புலோலியில் பெய்தன என்று புலவர் பாடினர்.

அன்பர்கண் ணீர்மழை யும்சிவ ஞர்மெய் யருள்மழையும்
மன்பிர பந்த மழையும் பிரசங்க மாமழையும்
கொன்புனை நீலப் புயலின் மழையும் கொடைமழையும்
இன்பொடு மல்கப் புலோலிமெய் வாழ்வினி லேறியதே.

சிவசம்புப்புலவர் இங்ஙனம் பாடியதும் அருகிலிருந்த ஆறுமுகநாவலர் ஆராமையோடு எழுந்து அவையோரைப் பார்த்துக் ''கம்பனுக்குப்பின் ஒரு சம்பன் அல்லவோ'' என்று சிவசம்பரைப் பாராட்டினர். சிவசம்பருக்குப் புலவர் பட்டமளித்தவர் ஆறுமுகநாவலர். இடம் புலோலி.

தமக்குப் புலவர்ப் பட்டம் வழங்கிய நாவலர் மறைந்த போது சிவசம்புப் புலவர் கண்ணீர் வடித்தவாறே பல பாடல்கள் பாடினர்.

ஆரூரனில்லைப் புகலியர்கோனில்லை அப்பனில்லை
நீரூரு மாணிக்க வாசக னில்லைத் திசையளந்த
பேரூரு மாறு முகநா வலனில்லைப் பின்னிங்கியார்
நீருரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கு நீர்மையரே.

## நாவலர் புகழ்மாலை

நன்னடக்கைப் பத்திரிகை நாவலனே நீயனுப்ப
என்னதவஞ் செய்தேனே யானறியேன் — அன்னதனுள்
உள்ளசில வாசகங்க ளூற்றுணரும் போதெல்லாம்
வெள்ளம் பொழியும் விழி.

— காசிவாசி செந்திநாதையர்

செஞ்சடையன் வெண்ணீற்றன் சிற்றம் பலமுதல்வன்
மஞ்சடையுங் கண்ட னடிமறவா — நெஞ்சுடைய
ஆறுமுக வையற்கே யாட்செய்யப் பெற்றனம்யாம்
வேற்றங்கள் வேண்டா வெமக்கு

சங்கேந்து மாற்கரிய சங்கரனைத் தன்னிதய
பங்கே ருகம்வைத்த பண்பானை — யெங்கோனை
ஆறுமுக நாவலனை யர்ச்சித் தடிபணியிற்
பாறும் பவநோய் பறிந்து.

— வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை

சீரேறு நல்லைநகர்த் தேசிகனு நாவலனுர்
நாரேற நாமுன்செய் நற்றவத்தால் — நேரேறப்
போந்திலரேற் சைவமெங்கே பூதியெங்கே கண்டியெங்கே
யேந்துபுக ழைந்தெழுத்தெங் கே.

— வேன்மயில்வாகனனுர்

எங்கெங்குஞ் செந்தமிழ்நூ லெங்கெங்குஞ் சைவமத
மெங்கெங்கும் பத்திநெறி யேறியவே — யெங்கெங்கு
நண்ணிசீ ராறுமுக நாவலனல் லைப்பதிவா
ழண்ணலுளத் தின்கருணை யால்.

— உடுப்பிட்டி சிவசம்புப்புலவர்

நல்லைநகர் ஆறுமுக நாவலர்பி றந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே — எல்லவரும்
ஏத்துபுரா ணுகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை.

— சி. வை. தாமோதரம்பிள்ளை

ஆரிருந்தென் ஆர்சிறந்தென் ஆறுமுக நாவலன்போல்
ஆரிருந்து போதிப்பார் ஐயையோ — ஆறணிந்து
தேக்குமதிச் செஞ்சடிலத் தேவுருவு கொண்டாலும்
வாக்கவனைப் போல வரா.

எவ்விடமும் நின்புகழே எவ்விடமும் நின்பேரே
எவ்விடமும் நின்சொல்லே எய்திபோல் — எவ்விடமும்
எக்கால முமில்லை இன்னினியார் நின்புகழ்க்குத்
தக்கார்சொல் நாவலன்நீ தான்.

— முருகேச பண்டிதர்

தேறுமுது சர்வகலை தேர்ந்த ஸ்ரீலஸ்ரீ
ஆறுமுக சாமியே யப்பனே — கூறுமுதற்
சற்குருவே சீனியே சர்க்கரையே கற்கண்டே
இக்குவல யம்விடுத்த தேன்.

பண்டிதர்கள் மாண்பகலப் பட்டாரே பாரிடத்தில்
மண்டுகலை வாணியும்பின் வாங்கினளே — தொண்டரெல்
தம்மாவி யற்றூர் போற் சார்ந்தாரே யாறுமுகப் (லாம்
பெம்மானே நீபிரிந்த பின்

— ஆவரங்கால் நமச்சிவாயபிள்ளை

அன்பர்களுக் காதரமா மாறுமுக நாவலனைத்
தன்பதத்திற் சேர்த்தசிவ சங்கரன்பால் — வன்பர்களை
வெல்லாமுன் பூதலத்தை விட்டுவரச் செய்தவிதஞ்
சொல்லாயென் பார்நந் துணை.

— சென்னை தண்டபாணி சுவாமிகள்

செல்லரித்துப் பொட்டூர்ந்து சீர்சிதைந்த வேடுகளை
யல்லலற வச்சிட்ட வாரறிஞன் — சொல்லுரையில்
நாத்திறமார் ஆறுமுக நாவலன் நந்தமிழ்க்கு
வாய்த்தநிதி யென்றே வழுத்து.

— பெருமாள் கோயிலடி செல்லையா

★ கடவுண்மாக் கலைகள் எல்லாம் வல்லவன் ★

## நல்லூர் கந்தப்பிள்ளை மைந்தன் ஆறுமுகப்பிள்ளைக்கு "நாவலர்" எனும் பட்டம் அளித்த திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ அம்பலவாண தேசிகர்

இவர் மடாதிபதியாயிருந்த காலம் 1845 — 1868 ஆகும். இவர் திருமந்திரம், மெய்கண்டசாத்திரம், பண்டாரசாத்திரம், சித்தாந்த நூல்கள் இவைகளிற் சிறந்த பயிற்சியுள்ளவர்கள். ஆதலின், தக்க பெரியோர்களை உடன் வைத்துக்கொண்டு இடைவிடாமல் எப்போதும் நூல்களை ஆராய்ந்து சிந்தித்துக்கொண்டே இருப்பார்கள்.

இவர் காலத்தில் நல்லூர் ஆறுமுகப்பிள்ளைக்கு 1849 ஆம் ஆண்டில் பெரிய வரவேற்பும் நாவலர் பட்டமளிப்பு விழாவும் நடைபெற்றன. நாவலர் அவர்களுக்கு ஏழாண்டுகள் மூத்தவரும் தமிழ் நாட்டவருமான திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் ஆதீனத்தில் வித்துவானாக நியமனம் பெற்றமை 1860-ஆம் ஆண்டிலேயாகும். பிள்ளை அவர்கள் ஆதீன வித்துவானுவதற்கு முன்னரே நாவலர் அவர்களின் நூற்பதிப்புக்களுக்குச் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார்கள்.

---

## நல்லூர் கந்தப்பிள்ளை மைந்தன் ஆறுமுகப்பிள்ளைக்கு திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தார் நாவலர் பட்டம் அளிப்பதற்குக் காரணராயிருந்த இரண்டாம் பட்டம் மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்

இவர் தாமே கலாவிநோதராயிருந்ததோடு, கற்றவர்களின் திறமையை நன்கு அறிந்து பாராட்டும் நுண்மாணுழை புலமுடையவராயும் இருந்தவர். இவர் ஆறுமுக நாவலர் அவர்களுடன் அளவளாவுவதில் அதிக ஆர்வங் கொண்டவர். அவரை ஆதீனத்துக்கு அழைத்துப் பெருங் கௌரவஞ் செய்தவருள் தலையாயவர். ஆறுமுகநாவலர் அவர்களின் மாணவர்களையும் நன்குமதித்துப் பெரிய பதவிகளில் நியமித்தவர்.

### ஏடுகள் உபகரிக்கப் பெற்றமை

திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவத் தமிழ் ஏடுகள் பலவிருந்தன. அவற்றைப் பழுதறப் பரிசோதித்து அச்சிற் பதிப்பிக்கத்தக்க வித்தகர் ஆறு முகநாவலர் அவர்களே எனக் கருதிய ஆதீனத்துச் சுவாமிகள், நாவலரிடம் பல ஏடுகளை உபகரித்தார்கள்.

நன்னூல் விருத்தியுரை, இலக்கணக்கொத்து, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, தர்க்கசங்கிரகம், அன்னம் பட்டீயம், சிவஞான சித்தியார், சிவஞானபோதம் முதலிய நூல்களைப் பதிப்பதற்குத் துணிந்த நாவலர் அவர்கள் முதலில் 1851ஆம் ஆண்டிலேயே நன்னூல் விருத்தியுரையை அழகாகப் பதிப்பித்தார்.

### ஆறுமுகநாவலர் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்த ஓதுவாமூர்த்திகள்

யாழ்ப்பாணத்தவர் நல்லமுறையில் சைவத் திருநெறிப் பன்னிரு திருமுறைகளைப் பண்ணோடு ஓதியுய்திபெற வேண்டும் எனக்கருதிய நாவலர் அவர்கள் தமிழ் நாட்டிலிருந்து ஓதுவார்கள் கூட்டத்தைச் சேர்ந்தவராய சுப்பிரமணிய ஓதுவாரை இங்கே வரவழைத்தார்கள். இவர் சாரங்கி வாத்தியத்தில் கைதேர்ந்தவர்.

நாவலர் அவர்கள் சிவபூசை செய்தபோதெல்லாம் தேவாரம் பாடிவந்த அவர் மாணவர் காசிவாசி செந்திநாதைய சுவாமிகளும் சாரங்கி வாத்தியமிசைப்பதில் பழகியிருந்தார். சுப்பிரமணிய ஓதுவார்மரபில யாழ்ப்பாணத்தில் ஓதுவார்கள் பலர் உருவாயினர். சுப்பிரமணிய ஓதுவாரின் மைந்தன் பொன்னுேதுவாமூர்த்திகள் தந்தையாருடன் யாழ்ப்பாணம்வந்து இங்கே நாவலர் பரம்பரையில் பொன்னம்பலபிள்ளை அவர்களிடம் பாடம்கேட்டுப் பெரிய படிப்பாளியாயினர்.

### நாவலர் நாயகமணி

உருத்திராக்க மாலைக்கு ஒரு நாயகமணியுண்டு. பூமாலைக்கு ஒரு பொலிந்த பகுதியுண்டு. பொற்சங்கிலிக்கு ஒரு பதக்கம் உண்டு. பேரறிஞர்கள், பெரும் புலவர்கள் மத்தியில் நாயகமணியாயிருந்தவர் நாவலர். தமிழ் நாட்டில் சிவகங்கை, இராமநாதபுரம், ஊற்றுமலை, எட்டயபுரம் முதலாய சமஸ்தானங்களில் பெரும் புலவர்கள் இருந்தார்கள். இசைத்துறையிலும் வைத்தியநாத ஐயர், கவிகுஞ்சரி, கிருஷ்ணையர், கோபாலகிருஷ்ணபாரதியார் முதலானவர்கள் இருந்தார்கள்.

இயற்றமிழ்துறையில் மழவை மகாலிங்கையர், தாண்டவராய சுவாமிகள், பிச்சுவையர், வேதநாயகம்பிள்ளை, மீனாட்சிசுந்தரம்பிள்ளை, அச்சுதானந்த சுவாமி, அண்ணாமலை ரெட்டியார், முத்துவீரியர் மாணவர் அமிர்தம் பிள்ளை, பூண்டி அரங்கநாதர், சந்திரசேகரகவிராயர், கருவூர்க் கந்தசுவாமி முதலியார், சச்சிதானந்த சுவாமிகள், இராமானுஜக்கவிராயர், முருகேசக்கவிராயர், முத்தராமலிங்க சேதுபதி, கருத்தமுத்துப்பிள்ளை, அழகியசொக்கநாத பிள்ளை, அருணாசலக்கவிராயர், சபாபதிமுதலியார், சோமசுந்தர நாயக்கர் முதலானோர் பெருஞ் சிறப்புப்பெற்றிருந்தனர்.

இங்ஙனமே ஈழத்திருநாட்டிலும் கரோல் விசுவநாத பிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை, நல்லூர் அப்புக்குட்டி ஐயர், கணேசபண்டிதர், வைமன் கதிரைவேற்பிள்ளை, மல்லாகம் கனகசபைப்பிள்ளை, குமாரசுவாமி முதலியார், இணுவில் அம்பிகைபாகர், அளவெட்டி கனகசபைப்புலவர், கற்பிட்டி சைமன்காசிச்செட்டி, சுன்னாகம் நாகநாத பண்டிதர், சங்குவேலி முத்துக்குமாரர், நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை, உடுப்பிட்டி சின்னத்தம்பியார் முதலானோர் பெரிய கல்விமான்களாய் இருந்தனர். சிவசம்புப் புலவர், முருகேசபண்டிதர் முதலானோர் நாவலரவர்களோடு பிற்றைநிலை முனியாது பின்தொடர்ந்த பேரறிஞர்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இத்தனை படிப்பாளிகளிடை அங்கும் இங்கும் ஆதீனங்களிலும் ஆஸ்தானங்களிலும் ஆறுமுகநாவலர் அவர்களுக்கு அமோக வரவேற்பிருந்தது. அவர் எங்குச் சென்றாலும் எந்த அவையிலும் நாயகமணியாகவே இருந்தார். ஆதீனமொன்றில் நாவலர் பட்டம்பெற்றபின் ஏனைய ஆதீனங்கள் ஊர்வலமாக அழைத்துப் பட்டணப் பிரவேசஞ் செய்தும், சுந்தரவேடம் ஈய்ந்தும் பெருஞ்சிறப்புச் செய்தன. அதுசிவம் என்று திருவாவடுதுறை மகாசந்நிதானம் நாவ

லரைச் சுட்டிக்காட்டியது. இன்னொரு சபையில் மமகுரு என்று நாவலரின் ஆசிரியரும் அதிபருமான பேர்சிவல் பாதிரியார் பணிவன்போடு சுட்டிக்காட்டி அமைந்திருந்தார்.

## நாவலர் அவர்கள் தமிழ்நாட்டிற் பெற்ற பழக்கமும் சிறப்புப் பாயிரங்களும்

நாவலர் அவர்கள் 1848-ஆம் ஆண்டில் சென்னபட்டணஞ் சென்று பேர்சிவல் பாதிரியார்மூலம் அந்நகரில் பிரபலிக்கமடைந்தவர். அதன்பின் 1849–ஆம் ஆண்டு அங்குசென்று அச்சுக்கூடம் வாங்கியதோடு திருவாவடுதுறையில் பெரியவர்கள் முன்னிலையில் நாவலர் என்னும் பட்டம்பெற்றவர். சூடாமணி நிகண்டுரை, சௌந்தரியலகரியுரை முதலிய நூல்களைச் சென்னையிலேயே அச்சிட்டு மீண்டவர். பின்னர் 1854ஆம் ஆண்டில் மூன்றும் முறையாகத் தமிழ்நாட்டுக்கேகித் தீட்சை முதலியன விசேடமாகப் பெற்றுச் சிவபூசை பயின்று மீண்டவர். பின்னர் 1858ஆம் ஆண்டில் சென்னபட்டணத்தில் நான்காவது முறை கால்வைத்து அங்கே வித்தியானுபாலன யந்திரசாலை நிறுவி ஏடுகளைப் பரிசோதித்து அச்சிற்பதித்து வெளியிட்டுப் பொன்னுச்சாமிதேவர் முதலானோருடன் நன்கு பழக்கமானவர். அடுத்து 1859ஆம் ஆண்டில் திருவாசகம் திருக்கோவையார் ஆகிய எட்டாந்திருமுறை நூல்களை ஆராய்ந்து வெளியிட்டுப் புகழ்பெற்றவர். அதனையடுத்து சிதம்பரத்திலே ஒரு சைவப் பிரகாச வித்தியாசாலை நிறுவுதல் வேண்டும் என்று தமிழ்கூறும் நல்லுலகத்துக்கு வேண்டுகோள் விடுத்தவர். பின்னர் 1860ஆம் ஆண்டில் திருக்கோவையார் பழையவுரையை ஆராய்ந்து செவ்வையாக வெளியிட்டவர். பின்னர் 1861ஆம் ஆண்டில் திருக்குறள் பரிமேலழகர் உரையையும் தருக்கசங்கிரகம் அன்னம்பட்டீயத்தையும் அருமையாக அச்சிற்பதித்து வெளியிட்டவர். அதன்பின்னும் ஒருவருடகாலம் இந்தியாவெங்கும் யாத்திரை செய்து 1862-ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மீண்டவர். எனவே 1848ஆம் ஆண்டு முதல் 1862ஆம் ஆண்டு வரை பதினன்கு வருடகாலம் தமிழ்நாட்டு மூலைமுடுக்கெல்லாம் யாத்திரை செய்து புகழ்பெற்றவர்.

### தாண்டவராய சுவாமிகள்

நாவலர் அவர்கள் பதித்த நூல்களுக்குச் சிறப்புப் பாயிரம் கொடுத்தவர்களுள் தாண்டவராய சுவாமிகள் பெரியவர். அவர் 250 அடி நீளமுள்ள நேரிசை யாசிரியப் பாவானமைந்த சிறப்புப்பாயிரங் கொடுத்துத் திருக்கோவையார்ப் பதிப்பைப் பாராட்டியுள்ளார்.

ஈழநாட் டைச்சேர்ந் திலங்குபல் வளங்களுந்
தாழ்விலா துற்றுத் தயங்கும் யாழ்ப்பாண
நகர்தனில் நல்லூர் நாமமார் புரத்திற்
பகர்தரு சைவ பரம்பரைக் குலத்திற்
றேன்றிய கந்தவேள் தொல்லையிற் செய்த
வேன்றநற் றவத்தால் எழில்பெற வுதித்தோன்
இயற்றமிழ்ப் பகுதியின் இயல்பெலாந் தெள்ளி
நயத்தக வுணர்ந்த நற்றமிழ்க் குரிசில்
திருக்குறள் உரைமுதல் சிறந்த நூலுரையெலாம்
சுருக்கமின் றறிந்த துகளில்பே ரறிவினேன்
கதிதரு சைவா கமங்களிற் கழறும்
பதிமுதல் முப்பொருள் பகுதியின் இயல்பெலாம்
சங்கை யொன்றின்றித் தலவிசே டத்தால்
அங்கையில் நெல்லிபோல் அளவிட் டறிந்தோன்
அரனடி அருச்சனை அன்றிமற் றென்றும்
திரமுறு பவநோய் தீர்த்திடா தெனவச்
சம்புவின் பூசனை தன்னைநா டோறும்
நம்பிமெய் யன்பால் நடாத்திடு நல்லோன்
நைட்டிகப் பிரம சாரிநன் னிலையிற்
றியக்கற நிற்கும் சீர்மைபெற் றுடையோன்
சங்கர னடியவர் தமைச்சரண் பணிந்தே
இங்குயான் செய்பணி யென்னென வியற்றுவோன்
சிவபிரான் மகிமையைச் சீவர்கள் தமக்குப்
பவமறப் போதனை யண்ணுபாக் கியத்தோன்
கிரியையால் ஞானங் கிடைக்கும தன்றி
யுரியமெய்ம் முத்திக் குபாயமன் றென்றுஞ்
சார்கே வலமுதற் சாற்றுமூ விடத்து
மாருயிர் சிவனுக் கடிமையே யென்றும்
புகல்சிவா கமவாக் கியப்பொருள் தன்னை
இகலறத் தேர்வுற் றிதயத் திருத்தினேன்
கல்வியிற் காலங் கழித்தலீங் கிவன்கணென்
றல்வில குளத்தவ றறைதர வமைந்தே
ஆறு முகனென அவனி
கூறு மியற்பெயர் கொண்ட நாவலனே.

இங்ஙனம் ஆறுமுகநாவலர் அவர்களைப் பாடிய தாண்டவராய சுவாமிகள், திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகரின் ஆசிரியர். தாண்டவராய சுவாமிகள் தமது மாணவரிடம் கூறிய தகவுரை என்னும் சிபார்சின்படியே திருவாவடுதுறையார் மீனுட்சிசுந்தரம்பிள்ளையை ஆதீன வித்துவானாக நியமித்தனர்.

### திரிசிரபுரம் வித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள்

திரிசிரபுரம் மீனுட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் பெரிய படிப்பாளி. அவர் ஆறுமுகநாவலர் அவர்களை 1860-ஆம் ஆண்டுக்கு முன்னரே நன்கறிந்திருந்தவர். அன்றி தாண்டவராய சுவாமிகள், பொன்னுச்சாமிதேவர் முதலானோர் கொண்டாடியவகையில் நாவலர் அவர்களை மேலும் அறிந்தவர். தாண்டவராய சுவாமிகள் நாவலரவர்களுக்கு நல்கிய சிறப்புப்பாயிரம் போல மீனுட்சி சுந்தரம்பிள்ளையும் கொடுத்து மகிழ்ந்தவர். அவரும் நூற்றுநாற்பத்து நான்கு அடி நீளமுள்ள நேரிசையாசிரியப்பாவால் நாவலர் அவர்களைச் சிறப்பித்துள்ளார்.

மன்னுகோ ணுசல மாகே தீச்சர
மென்னு மிரண்டு மிரண்டு கண்ணுகப்
பெற்றவீ முத்திற் பிறங்குமியாழ்ப் பாணத்
துற்றபல் வளனுக் குறையிட ணுகிச்
சொல்லூர் கழனி சூழ்தரக் கொண்டு
செல்லூர் பொழிலாற் சேணுல களந்து
வில்லூர் மாட மிக்கொடு பொலியும்
நல்லூர் வாழ்க்கை நயந்தருள் அறிஞன்
கந்தவேள் தவத்திற் கருதரன் பான்முன்
வந்தவே ளென்ன வந்தவ தரித்தோன்
நீற்றெடு கண்மணி நிறையப் பூண்பார்ப்
போற்றெடு பொலியும் புண்ணிய புருடன்
அவநெறி யாய வனைத்துங் களைந்து
சிவநெறி வளர்க்கும் திப்பிய குணத்தன்

எழுத்துமுத லாக வியம்புலக் கணமும்
வழுத்திலக் கியமும் வரம்புகண் டெழுந்தோன்
சமயம் விசேடந் தருநிரு வாணமென்
றமையுமுத் தீக்கையு மடைவுறப் பெற்றோன்
சுமங்கல விசேடச் சுருதியா மூலா
கமங்களின் முப்பொருள் கருதுபே ரருளான்
யுத்தியி னமைத்துணர்ந் தோங்கனு பூதி
சித்தியுற் றமைந்த சிவசிந் தாமணி
கற்றுணர் புலவருட் களிக்கு
முற்றுண ராறு முகநா வலனே.

வெள்ளைத் துணியில் திரைப்படம் நன்கு படியுமாப் போல் இப் புலவர்பெருமானின் கள்ளமில்லாச் சிந்தையில் உருவான கனிந்த பாடலில் அப்பெருமானுர் தம்மிலும் ஏழாண்டு இளைஞராகிய ஆறுமுகநாவலர் அவர்களை எத்துணை மதிப்போடு ஏத்திப் புகழுகின்றுர் என்பதை வெளிப்படையாகக் காணக்கூடியதாயிருக்கிறது.

## வித்துவான் தியாகராஜச்செட்டியார்

மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் முதல் மாணவர்களுள் ஒருவரும், சிறந்த படிப்பாளியும், உ. வே. சாமிநாத ஐயர் அவர்களுக்கு ஆசிரியர்வேலை எடுத்துக் கொடுத்தவருமான சி. தியாகராஜச் செட்டியார் என்பார் ஆறுமுக நாவலர் அவர்களை நன்கறிந்து அவருடைய பதிப்புக்களுக்குச் சிறப்புப்பாயிரங்கள் பலமுறை வழங்கியுள்ளார்கள். அவரும் தம்முடைய குருபரம்பரையில் — தாண்டவராயசுவாமிகள் — மீனுட்சிசுந்தரம்பிள்ளை — தியாகராஜச் செட்டியார் என்ற வரன் முறையில் பாடியுள்ளார். அவரும் நூற்றறுபது அடி நீளமுள்ள நேரிசை ஆசிரியப் பாவால் நாவலர் அவர்களைப் புகழ்ந்துள்ளார்கள்.

[பொன்னுச்சாமிதேவர் கேட்டுக்கொண்டபடி நாவலர் அவர்கள் நூல்களைப் பதிப்பித்தார் என்பதே உண்மை வரலாறு. அது நூல்களின் முகப்பிலும் சிறப்புப்பாயிரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. சைவசமயாசாரியராகிய மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருக்கோவையார் — இஃது உரையோடு இராமநாதபுர சமஸ்தானம் மகா ஸ்ரீ பொன்னுச்சாமி தேவரவர்கள் வேண்டுகோளின் படி, நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களால் பல பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதித்து அச்சிற் பதிப்பிக்கப் பட்டது.]

பொன்னுச் சாமிப் பூம்பெயர் புனைந்த
பூபதி யினிது புகன்றன னுக
நன்றுநன் றென்று நனியுள மகிழ்ந்தே
யுயர்பிர ணவப்பொரு ளொருதா னென்றே
நன்றறி வுறுத்தக் கொன்றைமலர் முடித்த
புராதனப் பெருமான் பொலிந்தினி தவரு
மருக்கொள்பூஞ் சோலைத் திருக்கோ ணசலங்
கருக்கோ தகறுந் திருக்கே தீச்சுர
மென்னுமித் தலங்களைத் தன்னகத் தடக்கிய
தென்னீழ நாட்டின் மன்னுயாழ்ப் பாணத்துப்
பல்லூர் புகழு நல்லூர் வாணன்
சந்ததமுஞ் சிவ சிந்தனை யகலாக்
கந்தவே டவத்தினில் வந்தவ தரித்தோன்
தொல்காப் பியமுதல் நல்லிலக் கணங்களும்
ஒல்காப் பயன்தரும் பல்காப் பியங்களும்
தவநெறி காட்டுஞ் சிவபுரா ணங்களும்
பதிபசு பாசப் பகுப்பினி துணர்த்துஞ்
செய்தவர்க் கேயுறுஞ் சைவசாத் திரங்களும்
ஐயந் திரிபற வறிந்து தெளிந்து
பெயரா வறிவிற் பெரியோ னுகி
வீறுகொண் டுயர்ந்த வாறுமுக நாவலன்
கரலிகி தங்களாற் காணுறு வழுக்களைந்
தரனடி யவர்க்கின் பரும்பப்
பரவுறு மச்சிற் பதிப்பித் தனனே.

தியாகராசச் செட்டியார் வஞ்சகமில்லாத நெஞ்சினர். இவரே தாம் வகித்த ஆசிரியர்ப்பதவியை இளைப்பாறிய வேளையில் உ. வே சாமிநாத ஐயர் அவர்களுக்கு வழங்க வழிவகுத்துதவிய உத்தமர்.

தியாகராசச் செட்டியாரைப்போலவே சுப்பராயச் செட்டியார் என்பாரும் மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் உத்தமமாணவர் அவரும் நீண்டதொரு சிறப்புப் பாயிரம் பாடி ஆறுமுகநாவலர் அவர்களைப் புகழ்ந்துள்ளார்கள்.

பொன்னுச் சாமிப் புனைகழ னரேந்திரன்
பெருகிய லச்சிற் றருகென வுரைப்பத்
தோன்றிய பலரும் வேண்டிய வாறே......
கந்தவேட் கன்பார் கந்தவேட் பெரியோன்
சொல்லியன் தவத்தாற் கல்வியங் குரித்தென்
விடலரும் பல்லுயிர் மடனற வந்தோன்
இலக்கண விலக்கிய தருக்க வேதாந்தப்
பெருக்க முற்றுணர்ந்த பீடுறு பெரியோன்
பதிபசு பாசப் பகுப்பிற் றுமெனப்
பொதிவுறத் தெரித்துப் பொருவிலின் புறுத்துஞ்
சைவசித் தாந்த மெய்வரு பனுவன்
முற்றுருங் குணர்ந்தருள் பொத்திய வசத்தாற்
சிவமே பொருளெனத் தேர்ந்த புந்தியோ
னவநிதி சமழ்ப்ப நல்லருட் கொடையினேன்
கதுவிய புலமைக் கதிர்ப்பின்
முதுபுக ழாறு முகநா வலனே.

## இராமசாமிப்பிள்ளை காட்டிய பணிவு

மதுரையில் வாழ்ந்த இராமசாமிப்பிள்ளை என்பவர் இராமநாதபுரத்தவர். அவர் முதலில் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்களிடம் முறையாகக் கற்றவர். கம்பரந்தாதி, முல்லையந்தாதி முதலிய நூல்களுக்கு உரை எழுதியவர். பேரூர்ப்புராணம் பதித்தவர். நாவலர் அவர்கள் 1864ஆம் ஆண்டில் திருப்பெருந்துறைக்குச் சென்றபோது ஆங்கிருந்த திருவாவடுதுறை ஆதீன மடத்தில் அமைதியாக இருந்தார். அவ்வேளை இராமசாமிப் பிள்ளையும் அவரின் நண்பர்களாய வன்றெண்டச் செட்டியாரும் நமசிவாயத்தம்பிரானும் நாவலரை அடுத்துத் தமக்குத்தெரியாத நூல்களைக் கேட்டுத் தெளிந்தார்கள். தெளிந்தகாலை நாவலரின் பரந்த அறிவை உன்னி அவரை விடாது தொடர்ந்து சிதம்பரம்வரை சென்று கற்றனர். இராமசாமிப்பிள்ளை சிதம்பரத்தில் நாவலரோடு தங்கியிருந்து தமது உரைகளைத்திருத்திக் கொண்டார்.

## நாவலர் மாணுக்கன் ஆறுமுகத்தம்பிரான்

இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். நாவலரவர்களின் பாடசாலையில் முறையாகக் கற்று அங்கே ஆசிரியராயும் இருந்தவர். துறவு மனப்பான்மைமீதூர்ந்துதம்

இவர் தமிழ்நாடு சென்று திருவண்ணுமலை ஆதீனத்திற் சேர்ந்து தம்பிரானுனவர். மெய்கண்ட சாத்திரங்களிலும் திருமுறைகளிலும் பெரிதும் ஈடுபாடுடைய இவர். பெரிய புராணத்துக்கு நல்ல உரை எழுதியுள்ளார். ஆறுமுகத் தம்பிரான் என்னும் பெயருள்ள வேறொரு பெரியவர் கிறிஸ்தவமதத்தை தழுவினுர் என்பர். அவர் வேறு இவர் வேறு. பெரியபுராணத்துக்கு உரை எழுதிய ஆறுமுகத் தம்பிரான் நாவலர் மாணுக்கன். அவர் திருவண்ணுமலை ஆதீனத்தைவிட்டு அகலவேயில்லை. அவர் அசையாத சைவர்.

## நாவலரைப் பாடியவர்கள்

### அம்பலவாண நாவலர்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சித்தன்கேணியூரிற் பிறந்த அம்பலவாணர் தம்பெயரால் நிறுவிய பாடசாலை இன்று பெரிய கல்லூரியாக நிலவுகின்றது. இந்த மகான் ஆறுமுகநாவலரை கண்கண்ட கடவுளாகப் போற்றியவர். இவர் இளைஞுக இருந்த காலத்தில் ஒரு கூட்டத்திற் குறிப்புரை கூறிய அழகைக் கவனித்த நாவலர் அவர்கள் ஆராமையோடு, ''எனக்குப்பின் இவன் தான்'' என்று முதுகில் தட்டிக்கொடுத்தார் என்பர்.

நாவன்மைமிக்கவர். நாவலர் என்னும் பட்டமும் பெற்றவர். கடுந்துறவி. ஆறுமுகநாவலரின் இறுதி யாத்திரையின்போது அவரின் மிதிதடிகளைச் சிரத்தில் தாங்கி அங்கப்பிரதிட்டை செய்து மயானம்வரை பின்தொடர்ந்து குரு விசுவாசத்தைக் காட்டியவர். ஆறுமுகநாவலர்மீது சற்குருமணிமாலை என்னும் பிரபந்தம் பாடித்துதித்தவர். இந்நூலில்வரும் 152 பாடல்களும் ஈற்றடியில் ஆறுமுக நாவலசற்குருமணியே என முடிகின்றன.

விரித்த திருமுறை யீராறுஞ்
  சைவம் விளைநிலமே
பரித்தபன் ஞன்குசித் தாந்தமு
  மங்கட் பயில்விளைவே
தெரித்த தமிழ்ப்புவிச் செங்கோ
  லரசு செலுத்திடவங்
குரித்தரு ளாறு முகநா
  வலசற் குருமணியே.

ஆறுமுகநாவல னடியிணைபரவுதுந்
தேறுமுகவின்பந் திகழ்தரற் பொருட்டே.

## நாவலரைப் பாடியவர்கள்

### மு. ரா. அருணுசலக் கவிராயர் அவர்கள்

சேற்றூர்க் கவிராயர் எனவழங்கும் இப் பெரியார் குடும்பமே கவிராயர்களின் குடும்பமாயிருந்தது. இவரின் தந்தையார், பெரிய தந்தையார், சகோதரர்கள் யாவருமே கவிராயர்கள் எனப் புகழ்பெற்றவர்கள். திருவாவடுதுறையிற் கல்விகற்ற அருணுசலக் கவிராயருக்கு அவ்வாதீனத்திலேயே பெரிய வேலைகிடைத்தும் அவர் அதனை ஏற்றுக் கொள்ளமறுத்திருந்து தமிழ்ப்பணி செய்தவர். திருக்குறள் மூலமும் தெளிபொருள் வசனமும் சிறப்புறச் செய்ததோடு 24 நூல்கள் செய்தவர். தலபுராணங்கள், அந்தாதிகள், இரட்டை மணிமாலைகள், மும்மணிக் கோவைகள் பாடிய பனுவல் வாயால் ஆறுமுகநாவலர் புராணமும் செய்த அறிஞர். இவர் திருக்குற்ருலக் குறவஞ்சி, வேணுவனத் தலபுராணம் முதலிய ஆறுநூல்களைக் குறிப்புரையுடன் பதிப்பித்தவர்.

### நாவலர் ஞான பரம்பரையில் ஒருவர்

நாவலர் ஞான பரம்பரையில் வந்த மாணவர்கள் பலருள் காசிவாசி செந்திநாதையர், வண்ணை பொன்னுத்துரைஐயர், மட்டுவில் வேற்பிள்ளை, நல்லூர் கைலாசபிள்ளை சுன்ஞகம் குமாரசுவாமிப்புலவர், கொக்குவில் சபாரத்தின முதலியார் முதலானேர்களை நன்கறிந்தவர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள்.



கரடியடியைக் கண்டவர்களைக் கண்டவராகிய இவர் நாவலர் வழிவந்த இரண்டு பெரிய மனிதர்களால் உருவானவர். அவர்கள் இருவரையும் இவர் பெயர் சொல்லாமல் மானேஜர் அவர்கள் என்றும், புலவர் அவர்கள் என்றும் போற்றுபவர்.

நாவலர் அவர்களின் வழியில் நைட்டிகப் பிரமசாரியார் அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமிழும் சைவமும் வாழத் தொண்டுசெய்து எண்பதாண்டுப் பராயத்தையும் இன்று கண்டுள்ளார்.

நாவலர் காவிய பாடசாலையில் நாவலர் தர்மபரிபாலனத்தில் உருவான இவர் தர்மம் என்ருெரு பொருளுளது என்னும் கந்தபுராணப் பாடலை ஆயிரத்துக்கு அதிகமான தடவைகளில் உரைவிரித்துப் பேசியுள்ளார்.

ஆயிரத்து அறுநூற்றுக்கு அதிகமான ஆசிரியர்களை உருவாக்கி நாவலர் நடைபயிலப் பயிற்சியளித்துள்ளார். நாவலர் ஞான பரம்பரை நாலாபக்கமும் பரவிப்படர வித்திட்ட இவரின் பணி மிகவும் பெரிது.

நாவலர் தருமத்தைப் பரிபாலித்த ஸ்ரீமத் கைலாச பிள்ளை அவர்கள், நாவலர் பாடசாலையையும் தர்மத்தையும் 1934ஆம் ஆண்டில் பொறுப்பேற்கும்படி இவரை வற்புறுத்தியபோது, அவற்றுக்கு வெளியே நின்று பணிபுரிதலே சால்பு எனத்துணிந்து கூறிமறுத்து இப்பால் நின்று பணி செய்துவந்தவர்.

நாவலர் போற்றிய கந்தபுராணமே நம்நாட்டுக் கலாசாரமூலம் எனப் பேசிப் பேசித் தொண்டை கிழிந்த பின், கந்தபுராண போதனை, கந்தபுராணக் கலாசாரம்,

தட்சகாண்ட உரை எழுதிப் பெருவிழாக்களில் வெளியிட்டவர். அரசாங்கம் அளித்த பரிசுத்தொகையை நாவலர் தருமத்துக்கே தருமஞ்செய்தவர்.

நாவலர் நினைவிலேயே, நாவலர் தியானத்திலேயே நாளும் எழுதிக்கொண்டிருக்கும் கிழவனார் இன்னும் வாழ வேண்டும். வாழ்வாராக.

## பெரியார்கள் புகழ்ந்த நாவலரவர்கள்

உபவேந்தர் பேராசிரியர் பன்மொழிப்புலவர் தெ. போ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் புகழ்மாலை:-

"ஆறுமுகநாவலரவர்கள் இயற்றிய சைவ வினாவிடைகள் இளைஞர் வயதுக்கேற்ப சிறிது சிறிதாக வளரவேண்டிய சைவக்கொள்கையை விளக்குகின்றன. பால பாடங்கள் அதற்குமுன் இருந்திருக்கலாம். வகுப்புக்கேற்ப மொழிக் கலைவளரும் முறையில், நல்ல தமிழில், மொழிச்சிக்கல்களை அறிந்து தமிழ்ப்பண்பாட்டிற்கும் நாட்டிற்கும் உகந்த வகையில் முதல் முதலில் எழுந்த பாலபாடங்கள் இவர் எழுதிய பாலபாடங்களேயாம்.

திருவிளையாடற்புராணம், பெரியபுராணம், கந்த புராணம் முதலிய நூல்கள் அந்நாளில் மக்கள் மனத்தினைக் கவர்ந்தவை. இவற்றின் கதைகளை உரை நடையில் எழுதியவர்கள் பலர். நாவலர் எழுதிய திருவிளையாடற் புராணக்கதைகளும் பெரிய புராணக்கதைகளும் இன்றும் தலைசிறந்து விளங்குகின்றன. பெரிய புராணத்தில் ஒரு பகுதிக்கு சைவமத ஆராய்ச்சியாக இவர் எழுதிய சூசனங்கள் அறிவுக்கண்ணாடியாக இன்றும் நிலைத்து விளங்குகின்றன. இவர் பதிப்பித்த நூல்களும் இவர் உரை நடையை வளர்க்க உதவின. இவர் சிறந்த பதிப்பாசிரியர். நாவலர் பதிப்பு என்றாலே நல்லபதிப்பு என்று தமிழ்நாடு முழுதும் நம்பியது.

## பெரியபுராண வசனம்

நாவலர் அவர்கள் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்தை வசனநடையில் எழுதிப் பதிப்பித்தமைக்குக் காரணம் காட்டியுள்ளார்கள். பெருஞ்சிறப்பனதாகிய திருத்தொண்டர் புராணமானது, பத்தியரூபமாய் இருத்தலால், நிகண்டுகற்று இலக்கியவாராய்ச்சி செய்து இலக்கண நூல்களிலே பயின்ற வித்துவான்களுக்கேயன்றி மற்றவர்களுக்குச் சிறிதும் பயன்படாமையாலும், அவ்வித்துவான்களுக்கும் நோய், கவலை முதலிய ஏதுக்களால் விவேகங்கிளராக் காலத்துப் பயன்படாமையாலும், நிறைந்த கல்வியுடைய வித்துவான்களும் குறைந்த கல்வியுடைய பிறரும் ஆகிய யாவரும் எக்காலத்தும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும், கல்வியில்லாத ஆடவர்களும் பெண்களும் பிறரைக்கொண்டு வாசிப்பித்து உணரும் பொருட்டும், நாயினும் கடையனாகிய என்னை ஒரு பொருளெனக் கருதி ஆட்கொண்டருளிய கிருபாசமுத்திரமாகிய ஸ்ரீமத் குருமூர்த்தியுடைய திருவடிகளைச் சிந்தித்துத் துதித்து வணங்கி, அவரது திருவருளினாலே, அதனைப் பெரும்பான்மையும் இயற்சொற்களும் சிறுபான்மை ஆவசியகமாகிய திரிசொற்கள் வடசொற்களும் பிரயோகிக்கப்படும் கத்தியரூபமாகச் செய்து, வாசிப்பவர்களுக்கு எளிதிலே பொருள் விளங்கும்படி பெரும்பான்மையும் சந்தி விகாரங்களின்றி அச்சிற் பதிப்பித்தேன்.

## நாவலரின் வாசாலப் பிரசங்கம்

வாசாலம், வாசாடம், வாசாலகம் என்பன ஒருவரின் பேச்சுத்திறனை, வாக்குவல்லபத்தைக் குறிக்கும். வாக்குவல்லபம், வாக்குவிற்பன்னம் வாய்ந்தவர்களுள் நாவலர் சிறப்பிடம் வகித்தவர் என்பது தமிழுலகம் அறிந்த செய்தி. வாசாலன் – சொல்வன்மையாளன்.

## இனியெம்பிரதிநிதி யார்?

இந்தத் தலைப்பில் 7-6-1879 ஆம் நாள் நாவலர் வித்தியாசாலையில் நாவலர் வாசாலப்பிரசங்கம் செய்துள்ளார். அட்டதிக்கெங்கும் சட்டவிழிபரப்பிய சிறீ. முத்துக்குமாரசுவாமி அவர்களை இலங்கை மங்கையின் சிரோரத்தினங்களுட் சிறந்துவிளங்கிய இரத்தினம் என உதயதாரகை புகழ்ந்தது. சிறப்புமிக்க இக்கூட்டத்தில் D. C. விசுவநாதபிள்ளை தலைமைதாங்கினார் என்றும், மானிப்பாய் லோட்டன் காரியதரிசியாய் இருந்தார் என்றும் பத்திரிகை கூறுகிறது. இந்த லோட்டன் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் முன்னோராவர்.

## ஆறுமுகநாவலரை சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள் புகழும்வகை

இலக்கண இலக்கியப் பிழைகளும் அச்சுப்பிழைகளும் இல்லாமல் உயர்ந்த தமிழிலக்கண இலக்கிய நூல்களையுஞ் சைவசமய நூல்களையும் பதிப்பிட்டுதவுவார். அரியரான எமது இளமைக்காலத்தில் ஆறுமுகநாவலரவர்களே அந்நூல்களைப் பிழையறப் பதிப்பித்து உதவினவர்கள். எழுத்துச்சொல்லாராய்ச்சிக்கு நாவலரவர்கள் தாம் நன்னூலுக்கு வரைந்த அரிய காண்டிகையுரையும், தொல்காப்பியச் சொல்லுக்குச் சேனாவரையர் வரைந்த சொற்பொருட்டின்பம் வாய்ந்தவுரையும் அவர்களாற் பதிப்பித்து வெளியிடப்படாவிடில் எம்போல்வார் அஞ்ஞான்று தமிழிலக்கண அறிவு பெறுதல் இயலாமலே போயிருக்கும். நாவலரவர்களின் தமிழ்த்தொண்டு சிவத்தொண்டுகளின் மாட்சி அளவிடற்பாலதன்று.

## மறைமலையடிகளின் மாணவர் மணி — திருநாவுக்கரசு முதலியார் நாவலரைப் புகழும்வகை

தூர மொழிகளில் சிறந்து கிடந்த குறியீட்டிலக்கணத்தையும், அதன் மாத்திரைக் கணக்கினையும் நிருமித்துதவிய நாவலரவர்கள் தமிழுரைநடைகளின் தாதையார்.

## சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் மைந்தன் அழகசுந்தரதேசிகர் நாவலரைப் புகழும்வகை

நாவலர் பிறந்து வளர்ந்து தொண்டு செய்த காலம் யாழ்ப்பாணத்திற்கு நல்ல காலம். நாவலர் பிறந்திலரேல் இன்று யாழ்ப்பாணத்திலே சைவம் இருக்குமோ? யாழ்ப்பாணத்துத் தமிழ் எப்படிப்பட்ட தமிழாய் இருக்குமோ?

## சென்னபட்டணம் சென்று வருதல்

இன்று தமிழ்நாடு எனவழங்கும் பழைய தென் பாரதத்தின் பத்தொன்பதாம் நூற்றாண்டுக் காலத்துச் தலைசிறந்த நகரம் சென்னை. குருகுலங்கள் மூலமாகவும் திண்

★ தருக்க வேதாந்தப் பெருக்க முற்றுணர்ந்தோன் ★

ணைப் பள்ளிக்கூடங்கள் மூலமாகவும் பரம்பரையாகப் படித்து முன்னேறிய பண்டிதர்கள் வித்துவான்கள், புலவர்கள் நிரம்பிய நகரமாகச் சென்னை பட்டணம் அக்காலத்தில் தலைசிறந்து விளங்கியது.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ சமயத் தொண்டாற்றிய பாதிரிமார்களைப் போலச் சென்னையிலும் பாதிரிமார் பலர் இருந்தனர். அவர்களும் தாங்கள் பணிபுரிந்த பிரதேசங்களில் வாழ்ந்த பண்டிதர்களைக் கொண்டு பைபிளை மொழிபெயர்த்து வந்தார்கள். இவ்வாறாகப் பாதிரிமாரைக் கிழக்குத் தேசங்களுக்குப் பணிபுரியவனுப்பிய விவிலிய சங்கத்தார் தமிழ் மொழியில் பைபிளை விரைவில் வெளியிடுமாறு யாழ்ப்பாணத்துப் பாதிரியார் பேர்சிவல் அவர்களுக்குப் பணித்தார்கள். அன்றி அதன் பதிப்புக்கான பெருந்தொகைப் பணத்தையும் அனுப்பிவைத்தார்கள்.

பைபிளை விரைவில் அச்சிடுவதற்காகப் பேர்சிவல் பாதிரியார் சென்னபட்டணஞ் சென்றபோது, அதனை அழகாக மொழிபெயர்த்துதவிய சைவப் பெரியார் ஆறுமுகம் அவர்களையும் உடனழைத்துக்கொண்டு 1848-ஆம் ஆண்டு சென்னைக்குச் சென்றார். இருபத்தாறுண்டு இளைஞராகிய சைவப் பெரியார் ஆறுமுகம் அவர்கள் சென்னையை முதன்முதலாகக் கண்டார். அங்கே பேர்சிவல் பாதிரியார் பைபிள் மொழிபெயர்ப்பை அச்சேற்றுவதற்கு வந்துள்ளார் எனக் கேட்டறிந்த அந்நாட்டுப் பாதிரிமாரும் படித்தவர்களும் பேர்சிவல் பாதிரியாரிடம் சென்று அவர் மூளையைக் குழப்பினார்கள்.

யாழ்ப்பாணத்திலே தமிழ்க் கல்வி குறைவு, செந்தமிழ் பேசுவோர் குறைவு. யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்பண்டிதர் மொழிபெயர்த்த பைபிளாயின் அதனை நாம் அங்கீகரிக்க மாட்டோம். அதனை நீவிர் அச்சிட விரும்பினால் முதலில் அதனை எமக்குமுன் வாசித்துக்காட்டுதல் வேண்டும். எங்கள் பண்டிதர்கள் அம்மொழி நடை நன்றாயிருக்கிறது என்று சொல்வார்களாயின், அதனை அச்சிட அநுமதிப்போம் என்றார்கள்.

இவற்றைக்கேட்ட பேர்சிவல் பாதிரியார் மனஞ் சோர்ந்து தமது பண்டிதரை நோக்கி என்ன செய்யலாம் என்று கேட்டபோது சைவப் பெரியார் எட்டுணையும் தளராது பாதிரியாரை வெகுவாக உற்சாகப்படுத்தித் தமது மொழிபெயர்ப்பைச் சென்ன பட்டினத்தார் நன்றாக அலசி ஆராய்ந்து தங்கள் கருத்தைத் தெரிவிக்கட்டும் என்று கூறினார்.

சென்னையில் வாழ்ந்தவர்களுள் மழவை மகாலிங்க ஐயரே என்பவரே தலையாயவராதலால் அவரே யாழ்ப்பாணத்துத் தமிழைக் கருத்தூன்றி ஆய்ந்து குறைநிறை சொல்லலாம் என்று சென்னபட்டின வாசிகள் சொன்னார்கள். மகாலிங்கையர் மழவராயனேந்தல் என்னும் ஊரைச் சேர்ந்த வீரசைவர். அவர் திருத்தணிகை விசாகப்பெருமாள் ஐயர், சரவணப்பெருமாள் ஐயர் ஆகியோரிடம் பயின்றவர். அவர் 1847-ஆம் ஆண்டில் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையுடன் பதித்துப் புகழ்பெற்றவர். மகாலிங்கையர் யாழ்ப்பாணத்தானின் மொழிபெயர்ப்பை முற்றிலும் வாசித்து அதிலே பிழையில்லை என்றும், வசனநடை நன்றாயிருக்கிறது "என்றும், அதனை அந்தப்பிரகாரமே அச்சிடுதல் தகுதியாகும் என்றும் தீர்ப்பளித்தார். அன்றி யாழ்ப்பாணத்தில் இத்தகைய தமிழ்நடை வல்லார் உளரோ என்று ஐயரவர்கள் வியந்து ஆறுமுகம் அவர்களைப் பாராட்டினார்கள்.

மழவை மகாலிங்கையர் அவர்களின் மதிப்பால் பேர்சிவல் பாதிரியார் பைபிளை அச்சிடக்கூடிய பெருவாய்ப்பினைப் பெற்றார். யாழ்ப்பாணத்துத் தமிழ் வசன நடையின் புகழ் சென்னபட்டினம் முழுவதும் பரவும்வகை செய்த பின், பாதிரியாரும் சைவப் பெரியாரும் புகழுடன் யாழ்ப்பாணம் மீண்டனர். யாழ்ப்பாணத்திலும் செந்தமிழ் வழக்குண்டு என்று சென்னபட்டினத்திலே தெரியச் செய்து மீண்ட சைவப் பெரியார் ஆறுமுகம் அவர்களிடம் பாதிரியார் அதிக அபிமானங்கொண்டு அவருக்குப் போதியளவு வேதனம் அளித்து அதனை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினார். சைவப் பெரியாரும் அன்றுமுதல் பாதிரியாரிடம் வேதனத்துக்கு வேலை செய்து வருவாராயினார்.

## மதமாற்றமும் மனமாற்றமும்

சைவப் பெரியார் ஆறுமுகம் அவர்கள் பேர்சிவல் பாதிரியாரின் பாடசாலையில் ஆங்கிலம் கற்ற காலத்தில் உடன் மாணவனாய் இருந்தவர் தில்லைநாதபிள்ளை என்பார் ஒருவர். அவரும் படிப்பு முடிந்தபின் அதே பாடசாலையில் ஆசிரியராய் நியமனம் பெற்றார். ஆசிரிய நியமனம்பெற்ற வேறொருவர் சின்னப்பாபிள்ளை என்பவர். இவர்கள் இருவரும் பாதிரியாருடன் நெருங்கிப்பழகி அவருடைய போதனைக்கு ஆளாகித் தாம் கிறிஸ்தவ சமயத்தில் சேர்வதாக வாக்குறுதி கூறியிருந்தார்கள். மதமாற்ற வைபவத்துக்கான நாளும் குறி திருந்தார்கள்.

இந் நிகழ்ச்சியை எவ்விதமோ அறிந்த சைவப்பெரியார் தம் சக ஆசிரியர் இருவரையும் தனிமையிற் சந்தித்துச் சைவசமயத்திற் பிறந்ததே பெரிய பேறாக இருப்பவும் அவர்கள் அதனைத்துறந்து புறமதத்திற் புகுதல் அறியாமையாகும் என்றும், சைவசமயத்தின் மகத்துவத்தை அவர்களுக்கு விளக்கினார். சைவசமயத்தைவிட்டு விலகமாட்டோம் என்று அவர்கள் சைவப்பெரியாருக்கு வாக்குறுதி கூறினார்கள்.

மதமாற்றத்துக்குக் குறிக்கப்பட்ட நாளில் இருவரும் தம்மிடம் வராதகாரணத்தை விசாரித்த பாதிரியாருக்குத் தமது பண்டிதர்மீது ஆத்திரம் உண்டானது. அவர் சைவப்பெரியாரிடம் கோபக்குறிப்புத்தோன்ற விசாரித்த போது, அவர் எட்டுணையும் அச்சமின்றி, ''எனக்குத் தெரிந்த சைவசமயத்து உண்மையை நான் அவர்களுக்குப் போதிக்கவேண்டியது என் கடமையே'' என்று பதில் கூறினார்.

தில்லைநாத பிள்ளையையும் சின்னப்பா பிள்ளையையும் தடுத்தாட்கொண்ட சைவப் பெரியாரைப் பாதிரியார் ஒன்றுஞ்செய்யவில்லை. ஆனால் மனமாற்றமடைந்த பிள்ளைகள் இருவரும் ஆசிரியர் வேலையைவிட்டு விலகவேண்டியவராயினர். இவர்களுள் சின்னப்பாபிள்ளை கொழும்புக்குச் சென்று, அக்காலத்தில் பிரபலவழக்கறிஞராயிருந்த பறங்கியருள் பறங்கியர் எனப் புகழ்பெற்ற றிச்சாட்மோர்கன் என்பாரிடம் சட்டம் பயின்று சட்டத்தரணியாகி யாழ்ப்பாணம் மீண்டு சட்டத்துறையில் மெத்தப் பிரகாசித்திருந்தார்.

தில்லைநாதபிள்ளையும் சின்னப்பாபிள்ளையும் தம் பொருட்டு வேலையைவிட்டு நீக்கப்பட்டமை சைவப் பெரி

யாருக்குத் தாங்கொணுத மனவேதனையை உண்டாக்கியது. அவர் தாமும் வேலையைவிட்டு விலகுவதற்குத் துணிந்த போது பாதிரியார் அவர் கையைப்பிடித்துத் தம்மைவிட்டு நீங்குதல் முறையன்று என்று பரிந்து பேசி அவரைத் தடுத்து நிறுத்திஞர்.

அந்தக்காலத்தவர் சிலர் சற்சமயமாகிய சைவசமயத்தினின்றும் புறச்சமயத்திலே பிரவேசித்தற்குக் காரணம், அவர்கள் சைவ சமயத்து உண்மைகளை நன்கு உணராமையே என உய்த்துணர்ந்த சைவப்பெரியார், சைவசமயப் பிரசாரஞ் செய்தல் தம்கடமை எனக்கருதிஞர். சைவசமயத் திருக்கோயில்களிலே அமையவேண்டிய பலவகை மண்டபங்களுள்ளே பிரசங்க மண்டபமும் ஒன்ருதல் வேண்டும் என்றும், சைவப் பிரசங்கஞ் செய்தற்குக் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பிரசாரகர்கள் காலத்துக்குக் காலம் முன் வருதல் வேண்டும் என்றும் நூல்கள் கூறுகின்றன என்பதைக் கருதிஞர்.

நமது சைவசமயிகள் சைவசமயத்தின் உண்மையையும், சமயக்கிரமங்களையும் அறியாதவராயிருக்கும் போது அவற்றை அவர்களுக்கு விரித்துரைப்பதின் மேலான புண்ணியம் வேருென்றில்லை என்றும், அந்நியர் இந்நாட்டிற் புகுந்து தங்கள் சமய்த்தை எம் நாட்டவருக்குப் போதிக்கின்ருர்களே, நம் நாட்டவர் எம் சமயத்தைப் போதிக்காதிருத்தல் வருந்தத்தக்கது என்று எண்ணித் தாமே சமயப்பிரசாரஞ் செய்வதற்குத் தம்மை ஆயத்தப்படுத்துவாராயிஞர்.

## சைவப் பிரசங்கம்

சைவப்பிரசாரம் மூலம் சைவ சமயத்தைப் பேணிப் பாதுகாக்க விரும்பிய சைவப் பிரசாரகர் ஆறுமுகம் அவர்களுக்கு யாழ்ப்பாணக் கலாசாரமூலம் கந்தபுராணம் என்பது நன்கு புலஞயிற்று. காஞ்சிபுரத்திலே கந்தபுராணம் அரங்கேற்றப் பெற்ற பழையகாலத்திலேயே, கந்தபுராணம் தமிழ்செய்த கச்சியப்பசிவாசாரியரின் சகபாடியான வீரராகவன் என்பார் கச்சிக்கணேசையர் அவர்களையும் அழைத்துக்கொண்டு கந்தபுராண ஏட்டுப் பிரதியொன்ருேடு யாழ்ப்பாணம் வந்தவர்.

அதியற்புத சுத்தச் செந்தமிழ் என்றும் எத்துணைத் தரம் திருப்பித் திருப்பிப் படித்தாலும் தெவிட்டாத பேரருள் திறம்பேசும் முருகப்பெருமானின் திருச்சரிதம் யாழ்ப்பாணத்தாருக்குப் பெருவிருந்தாக நிலவிவந்தது. யாழ்ப்பாணத்திலே நிறுவப்பெற்ற கந்தசுவாமி கோயில்கள் கோட்டங்கள் யாவற்றுள்ளும் நல்லூரில் எழுந்த கந்தசுவாமி கோயில் நகரத்தில் அமைந்த காரணத்தால் பலவித வசதிகளோடு கூடியதாகையால் அங்கே கந்தபுராணப் படிப்பையும் பிரசங்கத்தையும் பெருமளவில் செய்வதற்குச் சைவப்பெரியார் விரும்பிஞர்.

தமது விருப்பத்தைக் கோயில் அதிகாரியாயிருந்த இரகுநாத மாப்பாண முதலியாருக்கு 1847-ஆம் ஆண்டு ஆடிமாத உற்சவத்தின்போது விளைவேலி வேதக்குட்டி ஐயர் முன்னிலையில் விளக்கிக்கூறிஞர்,

திருக்கோயில் ஆகம விதிகளுக்கமையத் திருத்திப் புனரமைக்கப் பெறல்வேண்டும் என்றும், கர்ப்பக்கிருகத்திலேயுள்ள மூலமூர்த்தி அபிஷேகம் முதலியன செய்வதற்கு அமைவாகச் சிலாவிக்கிரகமாயிருத்தல் வேண்டும் என்றும், சிவதீட்சை பெற்ற அந்தணப்பெரியார்களே அங்கு முப்போதும் திருமேனி தீண்டிப் பூசைகளாதியன செய்தல் வேண்டும் என்றும் எடுத்துரைத்தார். அவர் சொன்னவற்றுக்கெல்லாம் செவிசாய்த்த அதிகாரி அவர்கள் திருத்தங்கள் செய்வதற்கு உடனடியாக உடன்பட்டிலர்.

தாம் பிறந்துவளர்ந்த நல்லூரில் சைவப் பிரசங்கஞ் செய்வதற்கு வசதிக்குறைவாயிருந்தமை கண்டு மனம்வருந்தி தாம் எடுத்துக்கொண்ட பலதுறைப்பட்ட சமய முயற்சிகளுக்கெல்லாம் கோயிலே முக்கியமானதெனக் கருதி, வண்ணுர்பண்ணை வைத்திலிங்கச்செட்டியார் கட்டுவித்த தையல்நாயகி சமேத வைத்தீசுவரன் கோயில் வசந்த மண்டபத்தை நாடிஞர். கோயிலதிகாரியுமுடன்படவே அவர் 1847ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முப்பத்தொராம் நாள், சுக்கிரவாரமும் சுவாதி நட்சத்திரமுங்கூடிய சுபதினத்திலே சைவம் எனும் செஞ்சாலி வளர்தற்பொருட்டுச் சைவப்பிரசங்கம் என்னும் மழையைப் பொழிந்தார்.

அன்றுமுதல் வெள்ளிக்கிழமை தோறும் மாலை நேரத்தில் பெருந்திரளாகக் கூடியிருக்கும் அடியார் கூட்டத்திலே ஒழுங்காகப் பேசிவந்தார். இடையில் அவரின் சகபாடியான நல்லூர் கார்த்திகேயஐயர் அவர்களும் பேசிவந்தார். இருவரும் பேசிவந்த கூட்டங்களுக்கான ஒழுங்கை சதாசிவப்பிள்ளை, தில்லைநாதபிள்ளை முதலாஞேர் செய்துவந்தார்கள். இங்ஙனம் பேசிவந்த காலத்தில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் அக்காலத்தில் நிகழ்ந்த ஒழுங்கீனங்களையும் கண்டித்துப் பேசிவந்தார். சிலர், அவர் சுப்பிரமணிய தூஷணஞ் செய்தார் என்று அவரைத் தூஷித்ததுமுண்டு.

சைவப்பிரசாரகர் தமது பிரசங்கத்தில் தம் மதத்தைத் தாபிக்கவும், புறமதத்தைக் கண்டிக்கவும் வேண்டிய வேளையில் பேசிய வாக்கியங்களைக் கேட்ட ஒருசிலர் பேர்சிவல் பாதிரியாரிடம் சென்று ''உம்முடைய தமிழ்ப் பண்டிதர் எம்மையும் எங்கள் மதத்தையும் வெகுவாகக் கண்டித்துப் பேசுகிருர். நாங்கள் இங்கே வந்தகாரணம் எங்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கேயாம். உம்முடைய பண்டிதரே எமக்கும் உமக்கும் மாருகப் பேசும்போது நாம் சமயம் வளர்ப்பதெங்ஙனம் அவரை நீவிர் உமக்குப் பண்டிதராக அடுத்து வைத்திருத்தல் அடாது'' என்று கூறிஞர்கள்.

முன்னர் தில்லைநாதபிள்ளையும், சின்னப்பாபிள்ளையும் கிறிஸ்தவ மதத்திற் பிரவேசித்தபோது தடுத்த பண்டிதர், இப்போது சிவன்கோயிற் பிரசங்கத்தில் கிறிஸ்தவ சமயத்தைக் கண்டிக்கிருர் என்பதையும் அறிந்த பேர்சிவல் பாதிரியார் தமது பண்டிதரிடம் மெதுவாகக் கேட்டார். ''தாங்கள் சிவன்கோயிற் பிரசங்கங்களில் எம்மையும் கண்டிக்கிறீர்களாம். அஃது என்னை.''

பாதிரியார் கேட்டதற்குப் பண்டிதர் சாவதானமாக ''ஆமாம் இங்கே நான் எனது கடமைகளைச் செய்யும் போது ஏதாவது தவறுண்டாகிறதா?'' என்று திருப்பிக் கேட்டார். அதற்குமேல் வேறெதுவுஞ் சொல்லமுடியாத பாதிரியார், தமது நண்பர்களிடம், ''இப்படிப்பட்ட ஒருவரைத் தகுந்த சம்பளம் கொடுத்தாலும் பெற்றுக் கொள்தல் அரிதாகையால் இக்காரியத்தில் யாம் ஏதும் பேசாதிருத்தலே தகுதி'' என்று கூறிஞர்.

சைவப்பிரசாரகர் தாம் மேற்கொண்ட சிறந்தபணியினை மிகுந்த சிரத்தையோடு செய்துவந்தார். சைவசமயத்தவரிடை நெடுங்காலமாக வழக்கற்றிருந்த சைவப் பிரசங்கம் இவர் செய்த பெரு முயற்சியால் புதுப்பொலிவும் பூரணமும் பெற்றுப் பல்லோராலும் வெகுவாகப் பாராட்டப்பெற்றது

---

★ இலக்கணமும் இலக்கியமும் வரம்பு கண்டோன் ★

*(Continued from the last issue.)*



# Sadhana Tattawa or The Science of Seven Cultures

— *Swami Sivananda*

## Energy Culture

5. Observe silence (mowna) for two hours daily and four to eight hours on Sundays.

6. Observe celibecy according to your age and circumstances. Restrict the indulgence to once a month. Decreace it gradually to once a year. Finally take a vow of abstinence for whole life.

## Ethical Culture

7. Speak the truth. Speak little. Speak kindly. Speak sweetly.

8. Do not injure any one in thought, word or deed. Be kind to all.

9. Be sincere, straight forward and open-hearted in your talks and dealings.

10. Be honest. Earn by the sweat of your brow. Do not accept any money, thing or favour unless earned lawfully. Develope nobility and integrity.

11. Control fits of anger by serinity, patience, love, mercy and tolerance. Forget and forgive. Adapt yourself to men and events.

## Will Culture

12. Live without sugar for a week or month. Give up salt on Sundays.

13. Give up cards, novels, cinemas and clubs. Fly from evil company. Avoid discussions with materialists. Do not mix with persons who have no faith in God or who criticise your Sadhana.

14. Curtail your wants. Reduce your possessions. Have plain boing and high thinking.

— *To be continued.*

---

ஒரு பாத்திரத்திலிருந்து இன்னென்றுக்குள் ஊற்றப்படும் எண்ணெயின் இடைவிடாத ஓட்டம்போன்று ஒரே எண்ணத்துடன், ஒரே நோக்கத்துடன் சுரக்கும் கடவுளைப் பற்றிய நிலேயான நினேவே பக்தி. — சுவாமி சிவானந்தர்






---

## அருள் விருந்து

ஆதாரம்: தர்மசக்கரம்

பொறுமை மனிதனுடைய மேன்மையைத் தேய்க்கும்.
மனதைப் பண்படுத்துவதே வாழ்க்கையின் நோக்கம்.
நெறியான வாழ்வில் நேர்மையும் உண்டு.
புல்லிய எண்ணங்கள் மனக்குழப்பத்தை உண்டாக்கும்.
சிலங்களுள் மிகவுஞ் சிறந்தது பொறுமை.
அவாவுக்கு அடிமைப்பட்டால் அலேயவேண்டிவரும்.
புகழைத் தேடித்திரிந்தால் புன்மை உண்டாகும்.
வேலேயில் அன்புள்ளவனுக்கு ஆற்றல் அதிகரிக்கும்.
விவேகம் இல்லாதவன் செத்தவனுக்குச் சமம்.
பெருமைக்கும் சிறுமைக்கும் நாமே பொறுப்பாளிகள்.
வல்லமையை ஓங்கச் செய்யவல்லது கடமை.

---

## மநுதர்மம்

இவற்ருல் இவை அழியும்

பொய்ம்மையால் — கேள்வி அழியும்
செருக்கிஞல் — தவம் அழியும்
அவமதிப்பதால் — ஆயுள் அழியும்
பிறர்க்குச் சொல்வதால் — கொடையின் மேன்மை அழியும்

---

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-12-79.

மில்க்வைற் செய்தி 48 அநுபந்தம்

உ

சிவமயம்

தேசிய வீரர் திலகம்

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

1822 — 1879




( இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கலைக்களஞ்சியத்துக்கு எழுதியவை )

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

யாழ்ப்பாணத்து நல்லூரிலே செல்வாக்குள்ள சைவ வேளாளக் குடும்பம் ஒன்றில் 1822-ஆம் ஆண்டு மார்கழி மாதம் பிறந்தவர்; தந்தை கந்தப்பிள்ளை, தாய் சிவகாமி யம்மை. இவர் திண்ணைப் பள்ளியிற் படித்தபிறகு பன்னிரண்டாம் வயதில் பார்சிவல் பாதிரியாருடைய பாடசாலையில் ஆங்கிலமும் சேனாதிராய முதலியார், சரவணமுத்துப் புலவர் முதலிய வித்துவான்களிடம் தமிழும் படித்தார். பார்சிவல் பாதிரியார் இவருக்குப் பத்தொன்பதாம் வயதிலேயே இரு மொழித்திறமை இருப்பதைக் கண்டு, தமது பாடசாலையில் தமிழ் ஆங்கில உபாத்தியாயராகவும், தமக்குத் தமிழ்ப் பண்டிதராகவும் அமர்த்திக்கொண்டு, பைபிளைத் தூய தமிழில் மொழி பெயர்க்கச் செய்தார். நாவலர் பைபிளை மொழிபெயர்த்து வருகின்ற காலத்திலே தமது சமயத்தை உணரவேண்டுமென்ற உணர்ச்சி தோன்றச் சைவ சித்தாந்த சாஸ்திரங்களையும், திருமுறைகளையும், சம்ஸ்கிருதத்தையுங் கற்றுச் சைவாகமங்களிலே வேண்டிய பகுதிகளையுந் தாமே கற்றுக் கொண்டார். இளமை தொட்டே கோயில்களிற் புராணங்களுக்குப் பதப் பொருள்கூறி விருத்தியுரை சொல்லுதல், தருக்கித்தல் முதலிய பழக்கங்களும் இவரிடம் இருந்து வந்தன. சைவானுஷ்டானங்களில் என்றுமே இவர் தவறியதில்லை.

அக்காலத்தில் பாதிரிமார் மதமாற்றத்துக்குக் கையாண்ட முறைகளால் நாவலருக்கு வருத்தம் உண்டாயிற்று, அவருடைய வாழ்க்கையே மாறியது. அவர் இல்வாழ்க்கையிற் புகாமல் சமய வளர்ச்சிக்கே உழைக்கவேண்டும் என உறுதிசெய்து கொண்டார். இருபத்துநான்காம் வயதின் தொடக்கத்தில் மாணவர் சிலரைச் சேர்த்துச் சம்பளம்பெறுமல் இராக்காலங்களில் சமய நூல்களையுங் கருவி நூல்களையும் படிப்பிக்கத் தொடங்கினர்.

இருபத்தைந்தாம் வயதில் வெள்ளிக்கிழமை தோறும் பெருந்திரளானவர்களுக்குச் சமயச் சொற்பொழிவு செய்து வந்தார். பின்னர் தமது உத்தியோகத்தை விடுத்து இருபத்தாறும் வயதில் யாழ்ப்பாண நகரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தாபித்தார். இவருடைய மாணவர்களே ஆசிரியர்கள் ஆனுர்கள். மருமகரும் மாணவரும் ஆன வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை பாடஞ் சொல்லுவதிலேயே காலங்கழித்தார். சபாபதி நாவலரும் இவருடைய மாணவர்களிற் சிறந்தவர். தமிழ்நாடு முழுவதிலும், சிதம்பரம் முதலிய முக்கிய தலங்கள்தோறும் சைவ வித்தியாசாலைகள் அமைக்க வேண்டும் சைவப்பிரசாரகர்களை உண்டாக்க வேண்டும் என்கின்ற ஊக்கம் நாவலருக்கு வரவரக் கிளர்ந்தது. நாவலர் என்ற பட்டம் இருபத்தேழாம் வயதில் திருவாவடுதுறை ஆதீனத்தால் வழங்கப்பட்டது. இராமநாதபுர சமஸ்தானம் நாவலர் முயற்சிகளுக்கு வலிந்து உதவ முன்வந்தது.

சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் உபயோகமான கருவி நூல் சமய நூல்களின் இன்றியமையாமையை உணர்ந்து, புதியனவாக நூல்கள் எழுதவும் ஏட்டில் இருந்தவைகளை ஆய்ந்து அச்சிடவும் இவருக்குப் பணி ஏற்பட்டது. இலங்கைப் பூமிசாஸ்திரங் கூட இவர் எழுதினுர். கணித வாய்ப்பாடுகளும் எழுதினுர். நாவலருடைய எழுத்துக்களும் பேச்சுக்களும் பதிப்புக்களும் சூழ்நிலையின் படிப்படியான வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டவை. அக்காரணத்தால் இவர் முயற்சிகளெல்லாம் சிறந்த அடிநிலையிலிருந்து தொடங்கி நடந்தவைகள் எனலாம்.

1. இவர் எழுதிய முதலாம் இரண்டாம் நான்காம் பாலபாடங்கள், திருவிளையாடற் புராணவசனம், பெரியபுராண வசனம், சூசனம் என்பவை ஒருவகையில் அமைந்திருக்கின்றன.

2 இலக்கண வினுவிடை, இலக்கணச் சுருக்கம், நன்னூற் காண்டிகை எழுதியதும் நன்னூல் விருத்தி, இலக்கணக் கொத்து, இலக்கணவிளக்கச் சூருவளி தொல்காப்பியப் பாயிர முதற்சூத்திர விருத்தி, பிரயோக விவேகம், சேனுவரையம், தருக்கசங்கிரகம், நிகண்டு பதிப்பித்ததும் மற்றொருவகை.

3. முதலாம் இரண்டாம் சைவ வினாவிடை, நித்திய கருமவிதி, சிவாலய தரிசனவிதி, புட்பவிதி, சிதம்பர மான்மியம், சைவசமய நெறியுரை, கோயிற் புராணவுரை, திருமுருகாற்றுப்படை உரை எழுதியதும், சிவஞானபோதச் சிற்றுரை, பதினொராந்திருமுறை, திருவாசகம், அகத்தியர் தேவாரத்திரட்டு பதிப்பித்ததும் வேறொருவகை.

4. பாரதம், சேதுபுராணம், கந்தபுராணம், பெரியபுராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை, திருக்கோவையார் உரை ஆகிய பதிப்புக்கள் வேறொருவரிசை.

5. சைவ தூஷண பரிகாரம், சுப்பிரபோதம், மித்தியாவாத நிரசனம் முதலிய கண்டன நூல்கள் எழுதியது ஒருவகை. மேலும், சமூக அரசியற் பிரச்சினைகளில் ஈடுபட்டுக் காலந்தோறும் வெளியிட்ட கட்டுரைகள், கண்டனங்கள் மிகப்பல. அவற்றுட் சில நாவலர் பிரபந்தம் என்ற பெயரில் வெளிவந்திருக்கின்றன. இவர் இயற்றிய கீர்த்தனங்களும் பாடல்களும் சில உண்டு. எண்ணிறந்த பிரசங்கங்களும் புராண வியாக்கியானங்களும் இவர் செய்தவை, எழுதப்படவே இல்லை.

தமிழ் உரை நடை ஆறுமுகநாவலரால் ஒருவகைத் திருத்தமும் அழகும் பெற்றது.

தொகுத்தவர்:
க. சி. குலரத்தினம்

வெளியிட்டவர்:
சிவநெறிப்புரவலர், சமாதான நீதவான்
மில்க்வைற் தொழிலதிபர்
க. கனகராசா

---

[ மில்க்வைற் வெளியீடுகளைப் பெறவிரும்புவோர்
மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளை அனுப்பித்
தேவையானவற்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள் ]

---

மில்க்வைற்
தபாற்பெட்டி 77,
யாழ்ப்பாணம். ☎ 7233

மில்க்வைற்
79, மெசஞ்சர் வீதி
கொழும்பு 12. 36063

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.